# தமிழகத் தொல்பழங்காலமும்
# பூண்டி அகழ்வைப்பகமும்

# தமிழகத் தொல்பழங்காலமும் பூண்டி அகழ்வைப்பகமும்

பதிப்பாசிரியர் :
**தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.**
*சிறப்பு ஆணையர்*

ஆசிரியர் :
**து. துளசிராமன்**
*காப்பாட்சியர்*

தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை
2005

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | TAMIZHAGA TOLPAZHANKALAMUM POONDI AGAZHVAIPPAGAMUM |
| Author | : | D. Thulasiraman |
| Copyright | : | Tamil Nadu State Dept. of Archaeology |
| Subject | : | Archaeology |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. & year | : | 166, 2005 |
| Type Point | : | 11 |
| No. of Pages | : | viii + 88 |
| Paper Used | : | 80 Gsm Maplitho |
| Type Setter | : | Gankarani Kaniniyagam Royapettah, Chennai - 14. |
| Publisher | : | State Department of Archaeology Chennai - 600 008. |
| Price | : | **Rs. 30/-** |
| Printed at | : | **TAMCOS** Royapettah, Chennai - 600 014. |


**முன் அட்டை** : குடியம் குகையும், கற்கால மனிதர்களின் வடிவங்களும்

**பின் அட்டை** : மனிதனின் பரிமாண வளர்ச்சி, பெருங்கற்கால வழிபாட்டு உருவம் - உடையாநத்தம், கற்கால கருவிகள் கிடைக்கும் இடம்- பரிக்குளம்.

# பதிப்புரை

இந்தியாவிலேயே சென்னைக்கருகிலுள்ள பல்லாவரத்தில் தான் முதல் பழைய கற்காலக் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வரிய கண்டுபிடிப்பை 1863ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்தியத் தொல்பழங்கால வரலாற்றின் தந்தை எனப் போற்றப்படும் சர். இராபர்ட் புரூஸ்புட் அவர்கள் நிகழ்த்தினார்கள். இதனைத் தொடர்ந்து அவரும் வில்லியம் கிங் என்பவரும் சேர்ந்து கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியில் பழைய கற்கருவிகள் கிடைக்கும் பல இடங்களை ஆய்வு செய்து அவற்றைப் பற்றிய செய்திகளை வெளியிட்டார்கள்.

குறிப்பாக 1930ஆம் ஆண்டில்தான் இப்பகுதியின் பழைய கற்கால ஆய்வில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது எனலாம். காமிடே, பர்கிட், வி.டி. கிருஷ்ணசாமி, டி.டி. பேட்டர்சன் மற்றும் கே.வி. சௌந்திரராஜன் போன்ற அறிஞர்கள் பல அரிய செய்திகளை வெளியிட்டனர். இந்த ஆய்வுகளின் மூலம் கொற்றலையாற்று பள்ளத்தாக்குப் பகுதியில் நான்கு படிவு படுகைகள் (Fourfold terrace System) உள்ளனவென்றும். வடமதுரையில் கூழாங்கல் திரளை அடுக்கின் பகுதி (Boulder Conglomerate Horizon) ஒன்று காணப்படுகிறது என்றும் தெரிய வந்தது. மேலும் இப்பகுதியில் சிறப்பாக காணப்படும் லாட்டரைட் பரப்பு (Laterite formation) பிளைஸ்டோசீன் காலத்திற்கு முன்பிருந்த கடினமான லாட்டரைட் பரப்பு என்றும் பிளைஸ்டோசீன் கால லாட்டரைட் பரப்பு என்றும் இரு வகையாக பிரித்தறியப்பட்டது. இவர்கள் இப்பகுதியின் பழைய கற்காலப் பண்பாட்டைச் சென்னை கைக்கோடரி மரபு (Madras hand axe tradition or industry) என்று சிறப்பாக அழைத்தனர். இது வடமேற்கு இந்தியாவிலுள்ள சோன் மரபிலிருந்து (Soan tradition or industry) வேறுபட்டதாகக் கண்டறியப்பட்டது.

பின்னர் 1957 முதல் 1979 வரை இந்தியத் தொல்லியல் துறையைச் சேர்ந்த கே.டி. பானர்ஜி என்பவர் அத்திரம்பாக்கம், குடியம், வடமதுரை, பூண்டி, நெய்வேலி ஆகிய இடங்களில் அகழாய்வுகளை மேற்கொண்டார். அண்மையில் சாந்திபப்பு என்பவர் இப்பகுதியின்


பிளைஸ்டோசீன் கால நிலப்பரப்பின் இயற்கூறுகள் மற்றும் மண்ணியலமைப்பின் (Pleistocene Geomorphology) அடிப்படையில் ஆய்வு செய்தும், அத்திரம்பாக்கத்தில் மீண்டும் அகழாய்வு செய்தும் பல அரிய செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார்.

இப்பகுதியின் தொல்லியல் முக்கியத்துவம் கருதி, கொற்றலையாற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ள பரிக்குளம் என்னும் ஊரில் இவ்வாண்டில் (2005 – 2006) அகழாய்வு மேற்கொள்ள தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை திட்டமிட்டுள்ளது. இந்த அகழாய்விற்கு முன்னோட்டமாகப் பரிக்குளத்தைச் சுற்றியுள்ள இடங்களில் தொல்லியல் மேற்பரப்பு ஆய்வு அண்மையில் செய்யப்பட்டது. இந்த ஆய்வில் மேட்டுப்பாளையம் என்னும் ஊருக்கருகில் உள்ள ஓட்டேரி ஓடையின் படுகையில் மரம் மற்றும் எலும்புகள் பதிந்துள்ள தொல்லுயிரியல் படிவப் பகுதிகள் (Fossil Portions) இரண்டு கண்டுபிடிக்கப்பட்டன. இவை இப்பகுதியின் தொல் பழங்கால வரலாற்றை மேலும் சிறப்பிக்கும் அரிய சான்றுகளாகக் கருதப்படுகின்றன. தமிழ்நாடு அரசு நிலஇயல் துறை மூலம் இத்தொல்லுயிரியல் படிவங்கள் பற்றித் தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இப்பகுதிியைப் பற்றிப் பொதுமக்கள் அனைவரும் அறியும் வண்ணம் பூண்டியில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அகழ்வைப்பகம் ஒன்றை அமைத்துள்ளது. இந்த அகழ்வைப்பகத்தைப் பற்றிச் சிறப்பாகவும், தமிழகத் தொல்பழங் காலத்தைப் பற்றிப் பொதுவாகவும் இக்கையேடு விளக்குகிறது. இதனைச் சிறப்பாக எழுதிய பூண்டி அகழ்வைப்பகக் காப்பாட்சியர் திரு. து. துளசிராமன் அவர்களையும், இக்கையேட்டைச் செப்பனிட்டு நூலாக்கம் செய்த இத்துறையின் உதவி கண்காணிப்புக் கல்வெட்டாய் வாளர் முனைவர் நா. மார்க்சிய காந்தி அவர்களையும், பதிவு அலுவலர் திரு. கி. ஸ்ரீதரன் அவர்களையும், வரைபடங்கள் வரைந்து தந்த முதுநிலை ஓவியர் திரு. கே. முரளிதரன் அவர்களையும், நிழற்படங்கள் எடுத்துத் தந்த நிழற்படக் கலைஞர் திரு. மு.த. ஸ்ரீதரன் அவர்களையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

*30.9.05*

**தி.ஸ்ரீ. ஸ்ரீதர்**
*சிறப்பு ஆணையர்*




பூண்டி அகழ்வைப்பகம் இருப்பிடம் காட்டும் வரைபடம்

# பொருளடக்கம்

1. தமிழகத் தொல்பழங்கால வரலாறு ... 1

2. பழைய கற்காலம் ... 2

அ) பழைய கற்காலத்தைப் பற்றிய ஆய்வுகள்
ஆ) சென்னை மரபு
இ) பழைய பாலாறு (கொற்றலையாறு)
ஈ) கொற்றலையாற்றுப் படுகைகள்
உ) அகழாய்வு செய்யப்பட்ட இடங்கள்
(1. பூண்டி, 2. நெய்வேலி, 3. வடமதுரை,
4. குடியம், 5. அத்திரம்பாக்கம்)
ஊ) பரிக்குளம் - பழைய கற்கருவிகளின் தொழிற்கூடம்
எ) முதற்கற்காலம்
ஏ) இடைக்கற்காலம்
ஐ) கடைக்கற்காலம்
ஒ) கொற்றலையாறு மற்றும் ஆரணியாற்றுப் பகுதியில்
பழைய கற்கால கருவிகள் கிடைக்குமிடங்கள்

3. நுண் கற்காலம் ... 17

4. புதிய கற்காலம் ... 18

5. பெருங்கற்காலம் ... 21

6. தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட
பெருங்கற்கால இடங்கள் ... 25

7. குறியீடுகள் (Graffiti marks) ... 32

8. தொல்பழங்கால ஓவியங்கள் ... 34

9. தமிழகத்தில் தொல் பழங்கால ஓவியங்கள்
காணப்படும் இடங்கள் ... 40

10. பூண்டி அகழ்வைப்பகம் ... 43

பழைய கற்காலப் பிரிவு
நுண் கற்காலப் பிரிவு
புதிய கற்காலப் பிரிவு
தொல்லுயிர் எச்சங்கள்(Fossils)
பெருங்கற்காலப் பிரிவு
தாய்த்தெய்வம்
தொல்மாந்தர் வாழ்வகம்

துணை நூற்பட்டியல் ... 53

சொல்லடைவு ... 57

# தமிழகத் தொல்பழங்கால வரலாறு
## (PRE-HISTORY OF TAMILNADU)

வரலாறு, கால அடிப்படையில் வரலாற்றுக்கு முந்திய காலம் (Prehistoric Period) மற்றும் வரலாற்றுக் காலம் (Historic Period) என்று இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்படும். எழுத்துச் சான்றுகள் தோன்று வதற்கு முந்திய காலத்தை வரலாற்றுக்கு முந்திய காலம் அல்லது தொல் பழங்காலம் எனவும், எழுத்துத் தோன்றி அதனை அடிப்படைச் சான்றாகக் கொண்டு விளங்கும் காலத்தை வரலாற்றுக் காலம் எனவும் கூறலாம். தொடக்கத்தில் மனிதன் நாடோடியாகவும் கரடுமுரடான கற் கருவிகளை உபயோகித்த மனிதனாகவும் வாழ்ந்தான். எனவே இதனைக் **கற்காலம்** எனவும் அறிஞர் குறிப்பார். கற்காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திலுக்கும் இடையில் வாழ்ந்த மக்கள் உலோகத்தின் பயனை அறிந்தவர்களாகவும், சுட்ட செங்கற்களாலான வீடுகளை அமைத்து வாழும் நாகரிகச் சிறப்பு எய்தியவர்களாகவும் விளங்கினர். இவர்கள் பெருங்கற்களைக் கொண்டு இறந்தவர்களுக்கு ஈமச்சின்னங்களை எழுப்பினார்கள். இருப்பினும் இக்கால மக்களைப் பற்றி அறிவதற்குத் தெளிவான எழுத்துச் சான்றுகள் இல்லாத காரணத்தால் இதனையும் தொல்பழங்காலத்திலேயே சேர்க்கலாம்.

தொல் பழங்காலம் நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை கீழ்வருமாறு:

1. பழைய கற்காலம் (Palaeolithic Age)
2. நுண் கற்காலம் (Microlithic Age)
3. புதிய கற்காலம் (Neolithic Age)
4. பெருங்கற்காலம் (Megalithic Age)

# பழைய கற்காலம் (PALAEOLITHIC AGE)

கற்கருவிகளின் பொதுத்தன்மைகளையும் தொழில்நுட்பங்களையும் அடிப்படையாகக் கொண்டு இந்தியாவின் பழைய கற்காலத்தை

1. முதற் கற்காலம் (Lower Palaeolithic Age)
2. இடைக்கற்காலம் (Middle Palaeolithic Age)
3. கடைக்கற்காலம் (Upper Palaeolithic Age)

என மூன்று கால கட்டங்களாகப் பிரிக்கலாம்.

தமிழ்நாட்டில் மேற்கூறிய மூன்று கால கட்டங்களைச் சேர்ந்த கற்காலப் பண்பாடுகளும் நிலவியிருந்ததற்கான சான்றுகள் கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்கில் மிக அதிக அளவில் கிடைக்கின்றன.

## பழைய கற்காலத்தைப் பற்றிய ஆய்வுகள்

இந்தியாவில் முதன் முதலாகத் தமிழ்நாட்டில்தான் பழைய கற்காலக் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இராபர்ட் புரூஸ் புட் என்னும் நிலவியல் அறிஞர் 1863 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் (சென்னைக்கருகில்) பல்லாவரத்துக்கு அண்மையில் உள்ள செம்மண் மேட்டில் இதனைக் கண்டுபிடித்தார். தொடர்ந்து புரூஸ்புட்டும் அவரின் சக அலுவலர் வில்லியம் கிங்கும் கொற்றலையாற்றுப் பகுதியில் தீவிரமான கள ஆய்வு மேற்கொண்டு அத்திரம்பாக்கத்தில் அதிக அளவில் கற்கருவிகளையும், குடியம் என்னும் ஊருக்கருகில் பழைய கற்கால மக்கள் வாழ்ந்த குகைகளையும் கண்டு உலகிற்கு அறிவித்தனர். இராபர்ட் புரூஸ் புட்டின் இறப்பிற்கு பின் (1912) இந்த ஆய்வில் சிறிது தொய்வு ஏற்பட்டது. பின்னர் 1930ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டு வரை வி.டி. கிருஷ்ணசாமி, டி.டி. பேப்டர்சன் மற்றும் கே.வி. சௌந்திரராஜன் போன்றோர் கொற்றலையாறு மற்றும் ஆரணியாற்றுப் படுகைகளில் (River terraces) ஆய்வு செய்து பழைய

கற்காலத்தைப் பற்றிய பல செய்திகளை வெளிப்படுத்தினர். அதன்பின்னர் 1960 முதல் 1979 வரை இந்திய அரசு தொல்லியல் துறையின் தொல்பழங்காலப் பிரிவைச் (Pre history Branch) சேர்ந்த கே.டி. பானர்ஜி என்பவர் நெய்வேலி, பூண்டி, வடமதுரை, குடியம், அத்திரம்பாக்கம் ஆகிய இடங்களில் அகழாய்வுகள் மேற்கொண்டு கொற்றலையாற்றுப் பகுதியில் காணப்படும் படிவு படுகைகள் (Fluvial terraces) பெருமழைக்காலத்தில் ஏற்பட்டவை அல்ல என்றும், அவை கடல் நீரால் ஏற்பட்ட படிவுப் படுகைகள் (Marine terraces) என்றும் விளக்கமளித்தார். சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறை பேராசிரியர் ஏ. சாமி (1976) அவர்களும் விதுலா ஜெய்ஸ்வால் (1978) அவர்களும் இப்பகுதியில் கிடைக்கும் பழைய கற்கருவிகளை முறையாக ஆய்வு செய்து, அவற்றின் தொழில்நுட்ப வகைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விரிவாக விளக்கியுள்ளார்கள்.

கடந்த 1991 முதல் 1995 வரை ஐந்து ஆண்டுகளில் சாந்தி பப்பு அவர்கள் கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியில் சுமார் 200 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்குக் கள ஆய்வு செய்து 22 இடங்களிலிருந்து 2012 பழைய கற்கருவிகளைச் சேகரித்து அவற்றை இபப்குதியின் பிளஸ்டோசீன் கால நிலப்பரப்பின் இயற்கூறுகள் மற்றும் மண்ணியலமைப்பின் (Pleistocene Geomorphology) அடிப்படையில் ஒப்பீட்டு ஆய்வு செய்து பழைய கற்கால மனித இன வாழ்க்கையின் போக்கைப் பற்றிப் பல கருத்துகளைக் கூறியுள்ளார். அவர் 1999 முதல் தொடர்ந்து அத்திரம்பாக்கத்தில் அகழாய்வுகள் மேற்கொண்டு இப்பகுதியில் வாழ்ந்த பழைய கற்கால மக்களின் வாழ்க்கை நிலை, அக்காலத்தில் நிலவிய தட்பவெப்ப நிலை, நில அமைப்பின் தன்மை ஆகியவற்றைப் பற்றி ஆய்ந்துள்ளார்.

# கற்கருவி வகைப்பாடு

## சென்னை மரபு (Madras Industry)

ஒரு வகையான தொழில்நுட்பத்தோடு ஓரிடத்தில் அல்லது ஒரு எல்லைக்குள் கிடைக்கும் கற்கருவிகளின் தொகுதியை ஒரு குறிப்பிட்ட மரபை சேர்ந்ததாகக் கூறலாம். கற்கருவிகளின் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவின் பழைய கற்காலத்தை இரண்டு மரபுகளாகப் பிரித்துள்ளனர்.

வட இந்தியாவில் சோன் (Soan) ஆற்றுப் பள்ளத்தாக்கில் கிடைக்கும் கற்கருவிகளை 'சோன்' மரபைச் சேர்ந்தது (Soan Industry) என்றும், தமிழ்நாட்டில் சென்னைக்கருகில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியில் கிடைக்கும் கற்கருவிகளை சென்னை மரபைச் சேர்ந்தது (Madras Industry) என்றும் கூறுவர்.

சென்னை மரபைச் சேர்ந்த கற்கருவிகளில் கைக்கோடரிகள் மிக அதிக அளவில் கிடைப்பதால் இதனைக் கைக்கோடரி பண்பாடு (Hand Axe Culture) என்றும் அழைப்பர். இக்கற்கருவிகள் யாவும் படிகக் கல்லிலிருந்து (Quartz) செய்யப் பெற்றவை. இப்படிகக் கல்லிலிருந்து மிக எளிதாகச் சில்லுகளைப் பெயர்த்தெடுத்துக் கருவிகளை உண்டாக் கலாம். எனவே இக்கால மக்களைப் 'படிகக் கல் மனிதர்கள்' (Quartzite men) என்றும் அழைக்கலாம்.

## கொற்றலையாறு (பழைய பாலாறு)

தற்போது வேலூர்மாவட்டம் வாலாசாப்பேட்டைக்கு அருகில் பாலாற்றிலிருந்து பிரிந்து செல்லும் ஒரு சிறிய கால்வாயே கொற்றலை ஆறாக உருமாறி அரக்கோணம், திருத்தணி, திருவள்ளூர், பொன்னேரி வட்டங்கள் வழியாகப் பாய்ந்தோடி எண்ணூருக்கு அருகில் கடலில் கலக்கிறது. இது பழைய பாலாறு (விருத்தக்ஷீர நதி) என்று அழைக் கப்படுகிறது.

செயற்கைக்கோள் புகைப்படங்கள் மற்றும் தொல்லியல் சான்று களின் அடிப்படையில் கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியில்

தான் சுமார் 5,00,000 முதல் 2,000 ஆண்டுகள் முன்னர் வரை பாலாறு ஓடியிருக்கலாம் எனத் தெரிகிறது.

கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் ஜெயங்கொண்டார் சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன்பு கருணாகரத் தொண்டைமானின் படைகள் வடக்கு நோக்கிப் போருக்காகக் காஞ்சிபுரத்திலிருந்து சென்றபோது முதலில் பாலாற்றைக் கடந்து சென்றது என்று கூறுகிறார். இதிலிருந்து சுமார்1100 ஆண்டுகளுக்கு முன்பு பாலாறு காஞ்சியின் வடக்கே ஓடியிருக்கலாம் என்று தெரிகிறது. ஆனால் இப்போது காஞ்சிபுரத்திற்குத் தெற்கே ஓடுகிறது. அதேபோல் காவேரிபாக்கத் திற்கு அருகிலுள்ள கொண்டாபுரம் கல்வெட்டுகள் அவ்வூர்க் கோவிலுக்கு வடக்கே பாலாறு ஓடியது என்று கூறுகிறது. தற்போது இக்கோவிலுக்குத் தெற்கே பாய்கிறது.

மேற்கூறிய சான்றுகளிலிருந்து சுமார் 5 இலட்சம் ஆண்டுகளி லிருந்து 2000 ஆண்டுகளுக்குள் பாலாறு வாலாசாப்பேட்டையி லிருந்து வடகிழக்காக ஓடி பழவேற்காட்டிற்கு அருகே கடலில் கலந்திருக்கலாம் என்றும் அதற்குபின் குறைந்தபட்சம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தடம்மாறி காஞ்சிபுரம், செங்கல்பட்டு வழியாக ஓடி சதுரங்கப்பட்டினத்தில் கடலில் கலந்திருக்கலாம் எனவும் ஓரளவு கணிக்க முடிகிறது. ஆனால் சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன்னர் காஞ்சிக்கு வடக்கே பாலாறு ஓடியதாக கலிங்கத்துப்பரணி குறிக்கிறது. இதிலிருந்து சுமார் 2000 ஆண்டுகள் முதல் 1100 ஆண்டுகள் வரை பாலாறு இரண்டு பிரிவாக ஓடியது என்றும் பின்னர் 1100 ஆண்டுகளுக்குப் பின் காஞ்சிக்கு வடக்காக ஓடிய ஆறு வறண்டு தெற்காக ஓடிய கிளை மட்டும் நிலைத்தது எனக் கொள்ளலாம்.

## கொற்றலையாற்றுப் படுகைகள் (River Terraces)

கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்கில் அல்லிக்குழி மலைக்குன்று களிலிருந்து காரனோடைக்கு அருகிலுள்ள எருமைவெட்டி பாளையம் வரை ஆங்காங்கே சில ஆற்றுப்படுகைகள் (River Terraces) காணப் படுகின்றன. இப்படுகைகள் ‘பிளஸ்டோசீன்’ (Pleistocene) காலத்தில் தோன்றியவை. இவற்றின் படிவடுக்குகளில் (Layers) பழைய கற்கால கருவிகள் பல காணக் கிடைக்கின்றன.

வி.டி. கிருஷ்ணசாமி மற்றும் டி.டி. பேட்டர்சன் போன்ற அறிஞர்கள் கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்கில் 100 அடி (30 மீட்டர்), 60 அடி (18 மீட்டர்), 20 அடி (7 மீட்டர்), 8 அடி (2 மீட்டர்) உயரங்களிலில் நான்கு படுகைகள் காணப்படுவதாகக் கூறுகிறார்கள்.

எச்.டி. சங்காலியா 60 அடி, 20 அடி மற்றும் 8 அடி உயரங்களில் மூன்று படுகைகள்தான் காணப்படுவதாகக் குறிக்கிறார்.

மேற்கூறிய படுகைகள் பற்றிய (Fourfold terrace Sequence) ஆய்வு முறைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்று கூறும் சாந்தி பப்பு (1996) அவர்கள் நில ஆக்க இயல் வழிமுறைகளைப் (Geomorphic Processes) பின்பற்றி இப்பகுதியை ஏழு வட்டாரங்களாகப் (Seven localities) பிரித்துக்கொண்டு அங்குக் காணப்படும் படுகைகளின் (Deposital terraces) படி வடுக்குகளை (Stratigraphic Sequence) ஆராய்ந்து, அதில் காணப்படும் கற்கருவி களை ஒப்பீட்டு ஆய்வு செய்து அவை யாவும் பிளைஸ்டோசீன் (Pleistocene) முதல் ஹாலோசீன் (Holocene) காலம் வரையில் சிறிது சிறிதாக ஏற்பட்டவை எனக் கூறுகிறார்.

## அகழாய்வு செய்யப்பட்ட இடங்கள்

இப்பகுதியில் பல்வேறிடங்களில் அகழாய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

1. **பூண்டி :** இங்கு நடைபெற்ற அகழாய்வில் (1965-66) ஏழு வகை மண்ணடுக்குகள் வெளிப்பட்டன. இவற்றுள் இடைக்கால கருவிகளும், கடை அசூலியன் வகைக் கற்கருவிகளும் கிடைத்தன.

2. **நெய்வேலி:** இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் (1962 - 63 மற்றும் 1963 - 64) அசூலியன் காலகட்டத்தைச் சேர்ந்த நீண்ட கத்திகளும், கைக்கோடரிகளும், வெட்டுக்கருவிகளும் கூர்முனைக் கருவிகளும் கிடைத்தன.

3. **வடமதுரை:** இவ்வூர் ஆரணியாற்றின் கிழக்குக் கரையில் அமைந்துள்ளது. இங்கு சுமார் 100 அடி உயரம் கொண்ட படிவு படுகை யில் அகழாய்வுச் (1966-67) செய்யப்பட்டது. இங்கு கிடைத்தக் கற் கருவிகளில் குறிப்பிடத்தக்கவை கைக்கோடரிகளாகும். இவ் வகையைச் சேர்ந்த கைக்கோடரிகள் பிரஞ்சு நாட்டின் வட பகுதியிலுள்ள 'அபவில்லி' என்ற இடத்தில் முதலில் கிடைத்ததால் இவை அபவில்லியன் மரபைச் சேர்ந்தவை எனத் தொல்லியல் அறிஞர்கள் அழைக்கின்றனர். இக்கைக்கோடரிகளன்றி கிழிப்பான் களும், சில்லுக் கருவிகளும் இங்கு கிடைத்தன.

4. **குடியம்** (குடியாலா): இவ்வூர் பூண்டிக்கு மேற்கே 10 கி.மீ. தூரத்தில் உள்ளது. இவ்வூருக்கு அருகிலுள்ள அல்லிக்குழி மலைத் தொடரில் பழைய கற்கால மக்கள் வாழ்ந்த 16 குகைகள் காணப்

படுகின்றன. இவற்றுள் மனத்தச்சம்மன் குகையில் அகழாய்வு (1962 - 63 மற்றும் 1963-64) மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழ்வின் மூலம் இங்கு வாழ்ந்த கற்கால மக்கள் கற்கருவிகள் செய்யும் தொழில் நுட்பத்தில் படிப்படியாக வளர்ச்சி பெற்றதைத் தெளிவாக அறிய முடிந்தது. இங்கு கிடைத்த கற்கருவிகளில் முக்கியமானவை கைக் கோடரிகள், கிழிப்பான்கள், வெட்டிகள், சுரண்டிகள் என்பவனவாம்.

5. **அத்திரம்பாக்கம்** : இவ்வூர் கொற்றலையாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இவ்வூருக்கு அருகில் பாயும் 'பூதடி மன்னுவங்க' என்னும் ஓடை கொற்றலை ஆற்றோடு கலக்கிறது. இந்த ஓடையை ஒட்டியுள்ள மேட்டில் பழைய கற்கருவிகள் கிடைப்பதை இராபர்ட் புரூஸ்புட் 1863-ஆம் ஆண்டில் கண்டறிந்தார். மேலும் அவர் இம்மேட்டின் கூழாங்கல் படிவடுக்கில் கைக்கோடரிகளோடு மனித எலும்புப் பகுதியின் தொல்லுயிர் படிவம் (Fossil) ஒன்றினையும் கண்டெடுத்தார். கே.டி. பானர்ஜி என்பவர் 1963-64 முதல் 1978-79 வரை இங்கு அகழாய்வு மேற்கொண்டார். இந்த அகழ்வில் இரண்டு கால கட்டங்களைச் சேர்ந்த கற்கருவிகள் கிடைத்தன. இவற்றுள் 'அசூலியன்' மரபைச் சேர்ந்த கைக்கோடாரிகள் சிறப்பானவையாகும்.

சென்னையிலுள்ள சர்மா மரபியல் கல்வி மையம் (Sharma Centre for Heritage Education) 1999 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் அகாழய்வு செய்கிறது. இதுவரை மேற்கொள்ளப் பட்ட அகழாய்வின் மூலம் கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்கில் நிலவியிருந்த பழைய கற்காலத்தைப் பற்றி பல்வேறு செய்திகள் வெளிப் பட்டன. அவை வருமாறு:

1. பழைய கற்கால மக்கள் பெருமளவில் கொற்றலையாற்றின் கரையோரமே வசித்தனர்.
2. அத்திரம்பாக்கத் தில் முதல் (Lower), இடை (Middle), கடை (Upper) பழைய கற்கால பண்பாடுகள் தொடர்ச்சியாக நிலவியிருந்தன.
3. சுமார் 10 லட்சம் ஆண்டுகளில் இப்பகுதியில் ஏற்பட்ட சீதோஷ்ண மாறுபாடுகள் குறித்து தெளிவாக அறிய முடிந்தது.
4. சுமார் 2,50,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய கற்கால மக்கள் வாழ்ந்த தரைப்பகுதி அசூலியன் வகை கற்கருவிகளுடன் வெளிப்படுத்தப்பட்டது. இது சிறப்பான முக்கிய செய்தியாகும்.
5. மாட்டினுடைய நீள் வட்ட வடிவமான 17 காலடித் தடயங்கள் (Bovid hoof impressions) மூன்று மீட்டர் ஆழத்தில் பழைய கற்கருவிகளுடன் காணப்பட்டன. பழைய கற்காலத்தில்

வாழ்ந்த விலங்கினுடைய காலடி தடயங்கள் இந்தியாவிலேயே இங்குதான் முதல்முறையாக அகழாய்வின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

6. தமிழகத்தில் கடைக்கற்கால பண்பாடு (Upper Palaeolithic phase) இருந்ததற்கான சான்றுகள் துல்லியமான பாள நிலையில் இங்குதான் முதன் முறையாக கண்டறியப்பட்டுள்ளது.

7. நீர் எருமை, குதிரை மற்றும் கொம்புகளற்ற மான் ஆகியவற்றின் பற்கள் தொல்லுயிரியல் படிவங்களாக (Fossils) கிடைத்திருப்பது மிகவும் அரிதானதாகும். மேற்கூறிய விலங்குகள் யாவும் பொதுவாக வெப்ப-மண்டலச் சமவெளிப் பகுதியில் வாழும் தன்மை வாய்ந்தவையாகும். இதன் மூலம் இப்பகுதி 2,00,000 ஆண்டுகளுக்கு முன்னர் வெப்ப மண்டலச் சமவெளியாக இருந்தது என அறிய முடிகிறது.

8. அத்திரம்பாக்கம் அகழாய்வின் மூலம் பழைய கற்காலத்திற்குக் கீழ்கண்டவாறு காலம் கணிக்கப்பட்டுள்ளது.

   1. முதல் கற்காலம் (Lower or Early Palaeolithic) - 5,00,000 - 2,50,000 ஆண்டுகளுக்கு முன்
   2. இடைக்கற்காலம் (Middle Palaeolithic) - 2,50,000 - 30,000 ஆண்டுகளுக்கு முன்
   3. கடைக்கற்காலம் (Upper or Late Palaeolithic) - 30,000 - 10,000 ஆண்டுகளுக்கு முன்

மேலும் அண்மைக்கால அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அத்திரம்பாக்கம் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களின் காலத்தைக் கணிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியாவின் பழைய கற்கால வரலாற்றையும் தெளிவாக அறிந்து கொள்ள அத்திரம்பாக்கத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அகழாய்வுகள் பல அரிய செய்திகளைத் தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## பரிக்குளம் - பழைய கற்கருவிகளின் தொழிற்கூடம்

பரிக்குளம் என்னும் சிற்றூர் பூண்டிக்குத் தென்மேற்கே சுமார் 10 கி.மீ. தூரத்திலுள்ளது. இவ்வூருக்கு தென்திசையில் உள்ள செம்மண் சரளைக்கல் மேடு (Laterite gravel deposit) இன்றைக்கு சுமார் ஐந்து

லட்சம் ஆண்டுகளுக்கு முன் நிலவிய பிளைஸ்டோசின் காலத்தில் தோன்றியது. இம்மேடு 'படிவுப் படுகை' (Deposital terrace) என்றழைக் கப்படுகிறது. இது மொத்தம் நான்கு படிவடுக்குகள் கொண்டுள்ளது. முதலில் சிதைந்த சரளைக்கல் அடுக்கும் (Detrital Laterite deposit) அதன் கீழ் சிறு கூழாங்கற்களுடன் கூடிய சரளைக்கல் அடுக்கும் (Laterite mixed with pebbles) அதன் கீழ் பெருங்கற்களுடன் கூடிய சரளைக்கல் அடுக்கும் (Laterite mixed with boulders) அதன் கீழே கெட்டியான களிமண்ணும் (Sriperumbudur or Avadi shale)காணப்படுகிறது.

இவற்றுள் இரண்டாவதாகக் கூறப்படும் கூழாங்கற்களுடன் கூடிய சரளைக்கல் அடுக்கில்தான் பழைய கற்கால கருவிகள் கண்டறியப்பட்டன. இவ்வடுக்கு சுமார் ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் நிலவிய பிளைஸ்டோசின் காலத்தில் ஏற்பட்டதாகும். எனவே, இப்படிவடுக்கில் கிடைக்கும் கருவிகள் ஏறத்தாழ மூன்று லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கொள்ளலாம். இந்திய நிலப் பொதியியல் துறை இப்பகுதியில் மனிதன் வாழ்ந்த நிலஅமைப்பு ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி யிருக்கலாம் எனக் கூறுகிறது. (நிழற்படம் - 6)

## கற்கருவிகளும் அதன் வகைகளும்

இம்மேட்டில் சரளைக்கற்களுக்காக இப்பகுதி மக்கள் தோண்டியபோது பல பழைய கற்கால கருவிகள் வெளிப்பட்டன. இக்கற்கருவிகள் நீண்ட காலமாக செந்நிற சரளைக்கல் அடுக்கில் கலந்திருந்ததால் இவற்றின் மேற்புறம் செந்நிறமாக (Patination) காணப்படுகிறது. இங்கு சுமார் எழுபதிற்கு மேற்பட்ட கற்கருவிகள் சேகரிக்கப்பட்டன. அவை ஒன்பது வகையாகப் பிரிக்கப்பட்டன. இவற்றுள் சில கைக்கோடரிகள் அபவில்லியோ - அசூலியன் பண்பாட்டைச் சேர்ந்தவையாகவும் பிற கருவிகள் யாவும் ஆசூலியன் பண்பாட்டைச் சேர்ந்தவையாகவும் காணப்படுகின்றன.

## கருவிகளின் வகைகள்

1. கைக்கோடரிகள் (Hand axes)
2. இதய வடிவிலான கைக்கோடரிகள்(Cordate Hand axes)
3. முக்கோண வடிவ கைக்கோடரிகள் (Triangular Hand axes)
4. வெட்டுக்கத்திகள் (Cleavers)

5. சுரண்டிகள் (Scrappers)
6. சிறிய வெட்டுக் கருவிகள் (Small choppers)
7. கூர்முனைக்கருவிகள் (Points)
8. வட்டுகள் (Ovates)
9. மரம் இழைக்கும் உளி (Planes)

## ஆய்வுக்குறிப்பு

பரிக்குளத்தில் நிறைய கற்கருவிகளும், பெயர்த்தெடுக்கப்பட்ட சில்லுகளும் (Flakes) கிடைப்பதால், இவ்விடம் பழைய கற்காலத்தில் கற்கருவிகள் செய்யும் தொழிற்கூடமாக (factory site) விளங்கியிருக்க வேண்டும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து கொற்றலை யாறு மற்றும் ஆரணியாற்றுச் சமவெளிப் பகுதிகளில் நிலவியிருந்த பழைய கற்காலப் பண்பாட்டின் மூன்று கால கட்டங்களைப் பற்றிக் கீழ்வருமாறு காண்போம்.

### முதற் கற்காலம் (Lower Palaeolithic Age) (5,00,000 - 2,50,000 ஆண்டுகளுக்கு முன்)

இக்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் கிடைக்கின்றன. குறிப்பாகக் கொற்றலையாற்றின் சமவெளிப் பகுதியில் இக்கால மக்கள் பெருமளவில் வசித்துள்ளனர். அல்லிகுழி மலைத் தொடரில் குடியம் (குடியாலா) என்னும் ஊருக்கருகில் இம்மக்கள் வாழ்ந்த 16 குகைகள் உள்ளன. அத்திரம்பாக்கம் அகழாய்வில் இக்கால மக்கள் வாழ்ந்த தரைப்பகுதி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இவர்கள் அபவில்லியன் மற்றும் அசூலியன் வகை கைக்கோடரிகள், கிழிப்பான்கள், வட்டுகள் போன்ற கற்கருவிகளை அதிக அளவில் உபயோகப்படுத்தினர்.

### இடைக்கற்காலம் (Middle Palaeolithic Age) (2,50,000 - 30,000 ஆண்டுகளுக்கு முன்)

இக்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களின் சில இடங்களில் கிடைக்கின்றன. இவை பெரும்பாலும் அளவில் சிறியனவாகவும், சில்லு கருவிகளா கவும் (Flake tools) காணப்படுகின்றன. இக்காலத்தில் கைக்கோடரி

களின் பயன்பாடு பெருமளவில் குறைந்துவிட்டது. சிறிய வடிவிலான கைக்கோடரிகள் சில இடங்களில் மட்டும் கிடைக்கின்றன. இக் காலத்தில் முனைகள் (Points), சுரண்டிகள் (Scrappers), கத்திகள் (Blades) போன்ற கருவிகளே பெருமளவில் வழக்கத்திலிருந்தன.


### கடைக் கற்காலம் (Upper Palaeolithic Age) (30,000 - 1,00,00 ஆண்டுகளுக்கு முன்)

அண்மைக்கால அத்திரம்பாக்கம் அகழாய்வுகளில் தமிழகத்தில் கடைக்கற்காலம் இருந்ததற்கான உறுதியான சான்றுகள் முதன்முதலில் கண்டறியப்பட்டுள்ளன. இங்கு செந்நிற படிவடுக்கு களில் (Ferricreate or Red soil) கருவிகள் செய்வதற்கேற்ற மூலக்கற்களும், சிறு கத்திகளும், சுரண்டிகளும் அதிக அளவில் கிடைத்துள்ளன. அத்திரம்பாக்கம் தொடர்ந்து கடைக்கற்காலத்திலும் கருவிகள் செய்யும் தொழிற்கூடமாக விளங்கியுள்ளது.

### வாழ்க்கைமுறை

கொற்றலையாற்றுப் பகுதியில் வாழ்ந்த பழைய கற்கால மக்கள் நாடோடிகளாகவும், வேட்டையாடும் தொழிலினை மேற்கொண்டவர் களாகவும் விளங்கினர். இவர்கள் கற்களையும், உறுதியான மரக் கிளைகளையும் கருவிகளாகப் பயன்படுத்தினர். நெருப்பின் பயனை அறியவில்லை. மரப்பட்டைகளையும் விலங்குகளின் தோலையும் ஆடைகளாகப் பயன்படுத்தினர். மலைக்குகைகளிலும், ஆற்றுச் சம வெளிகளிலும் வாழ்ந்தனர். இவர்கள் இறந்தவர்களை இயற்கையாக அழியும் வண்ணம் அப்படியே விட்டுவிட்டனர்.

# கொற்றலையாறு மற்றும் ஆரணியாற்றுப் பகுதியில் பழைய கற்காலக் கருவிகள் கிடைக்கும் இடங்கள்




(எண்கள் பட்டியலிலுள்ள இடங்களைக் குறிக்கும்)

## கொற்றலையாறு மற்றும் ஆரணியாற்றுப் பகுதியில் பழைய கற்காலக் கருவிகள் கிடைக்கும் இடங்கள்:

| வ. எண். | ஊர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | அஞுநூர் | திருவள்ளூர் |
| 2. | அத்திரம்பாக்கம் | திருவள்ளூர் |
| 3. | அம்மணம்பாக்கம் | திருவள்ளூர் |
| 4. | அம்ரிஷபுரம் | வேலூர் |
| 5. | அமரம்பேடு | திருவள்ளூர் |
| 6. | அரக்கோணம் | வேலூர் |
| 7. | அரும்பாக்கம் | திருவள்ளூர் |
| 8. | அல்லிக்குழி | திருவள்ளூர் |
| 9. | ஆப்பூர் மலை | வேலூர் |
| 10. | இலவம்கண்டிகை | திருவள்ளூர் |
| 11. | இரங்காபுரம் | திருவள்ளூர் |
| 12. | உமையாள் | காஞ்சிபுரம் |
| 13. | ஊத்துக்கோட்டை | திருவள்ளூர் |
| 14. | எடமச்சி | திருவள்ளூர் |
| 15. | எருமைவெட்டிபாளையம் | திருவள்ளூர் |
| 16. | ஏரிகுப்பம் | திருவள்ளூர் |
| 17. | ஒதப்பை | திருவள்ளூர் |
| 18. | ஒரகடம் | திருவள்ளூர் |
| 19. | காஞ்சிபாடி | திருவள்ளூர் |
| 20. | கச்சூர் | திருவள்ளூர் |
| 21. | கணியனூர் | வேலூர் |
| 22. | கட்டுப்புடி | திருவள்ளூர் |
| 23. | கம்மவாரி பாளையம் | திருவள்ளூர் |
| 24. | களத்தூர் | வேலூர் |
| 25. | கல்மேடு | திருவள்ளூர் |
| 26. | கல்வாய் | திருவள்ளூர் |
| 27. | கல்வை | திருவள்ளூர் |

| வ. எண். | ஊர் | மாவட்டம் |
|---|---|---|
| 28. | கரடிப்புத்தூர் | திருவள்ளூர் |
| 29. | கருக்கம்பாக்கம் | திருவள்ளூர் |
| 30. | கிரிண்யேத்தம் | திருவள்ளூர் |
| 31. | கிருஷ்ணாபுரம் | திருவள்ளூர் |
| 32. | கீழ்வெண்பாக்கம் | வேலூர் |
| 33. | குஞ்ஞூர்பாளையம் | திருவள்ளூர் |
| 34. | குடியம் | திருவள்ளூர் |
| 35. | கூணிபாளையம் | திருவள்ளூர் |
| 36. | கொல்லபாளையம் | திருவள்ளூர் |
| 37. | சால்மங்கலம் | காஞ்சிபுரம் |
| 38. | சிறுமாத்தூர் | வேலூர் |
| 39. | சிறுவாஞ்சூர் | வேலூர் |
| 40. | சீதஞ்சேரி | திருவள்ளூர் |
| 41. | செங்குன்றம் | திருவள்ளூர் |
| 42. | சென்ராயன் பாளையம் | திருவள்ளூர் |
| 43. | சென்ன சமுத்திரம் | வேலூர் |
| 44. | சேத்துப்பட்டு | காஞ்சிபுரம் |
| 45. | சோமங்கலம் | காஞ்சிபுரம் |
| 46. | தக்கோலம் | வேலூர் |
| 47. | தரணிவராகபுரம் | திருவள்ளூர் |
| 48. | திம்மபூபாலபுரம் | திருவள்ளூர் |
| 49. | திருக்கச்சூர் | வேலூர் |
| 50. | திருபெரும்புதூர் | காஞ்சிபுரம் |
| 51. | திருமால்புரம் | வேலூர் |
| 52. | திருமுல்லைவாயில் | திருவள்ளூர் |
| 53. | தேவேந்திரபாக்கம் | திருவள்ளூர் |
| 54. | தொள்ளாழி | காஞ்சிபுரம் |
| 55. | தோண்டாக்குளம் | காஞ்சிபுரம் |

| வ. எண். | ஊர் | மாவட்டம் |
|---|---|---|
| 56. | தோமூர் | திருவள்ளூர் |
| 57. | நக்கலகோணா | திருவள்ளூர் |
| 58. | நம்பாக்கம் | திருவள்ளூர் |
| 59. | நயப்பாக்கம் | திருவள்ளூர் |
| 60. | நன்மங்கலம் | காஞ்சிபுரம் |
| 61. | நாகவேடு | வேலூர் |
| 62. | நாட்டரசம்பட்டு | காஞ்சிபுரம் |
| 63. | நாய்க்கன்பாளையம் | திருவள்ளூர் |
| 64. | நாராயணபுரம் | திருவள்ளூர் |
| 65. | நெமிலி | வேலூர் |
| 66. | நெய்வேலி | திருவள்ளூர் |
| 67. | நெல்வாய் | திருவள்ளூர் |
| 68. | பண்ருட்டி | காஞ்சிபுரம் |
| 69. | பரந்தூர் | காஞ்சிபுரம் |
| 70. | பரிக்குளம் | திருவள்ளூர் |
| 71. | பாகவெளி | வேலூர் |
| 72. | பாதிரிவேடு | திருவள்ளூர் |
| 73. | பிளேஸ்பாளையம் | திருவள்ளூர் |
| 74. | புத்தூர் | திருவள்ளூர் |
| 75. | புதூர் | திருவள்ளூர் |
| 76. | புல்லரம்பாக்கம் | திருவள்ளூர் |
| 77. | புலியமங்கலம் | வேலூர் |
| 78. | பூண்டி | திருவள்ளூர் |
| 79. | பென்னாலூர்பேட்டை | திருவள்ளூர் |
| 80. | போந்தவாக்கம் | திருவள்ளூர் |
| 81. | மஞ்சாங்கரணை | திருவள்ளூர் |
| 82. | மண்ணூர் | திருவள்ளூர் |
| 83. | மதிரிமேடு | திருவள்ளூர் |

| வ. எண். | ஊர் | மாவட்டம் |
|---|---|---|
| 84. | மதுரமங்கலம் | காஞ்சிபுரம் |
| 85. | மயிலாப்பூர் | திருவள்ளூர் |
| 86. | மல்லாவரம் | வேலூர் |
| 87. | மாகாளியம் | திருவள்ளூர் |
| 88. | மாதர்பாக்கம் | திருவள்ளூர் |
| 89. | மாவண்டூர் | திருவள்ளூர் |
| 90. | மாளத்தூர் | திருவள்ளூர் |
| 91. | முசிறி | வேலூர் |
| 92. | மேட்டுப்பாளையம் | திருவள்ளூர் |
| 93. | மேட்டூர் | வேலூர் |
| 94. | இராஜபாளையம் | திருவள்ளூர் |
| 95. | ரோஷாநகரம் | திருவள்ளூர் |
| 96. | வடமதுரை | திருவள்ளூர் |
| 97. | வதியூர் | காஞ்சிபுரம் |
| 98. | வல்லக்கோட்டை | காஞ்சிபுரம் |
| 99. | வளையாக்கரணை | வேலூர் |
| 100. | வாணியன்சத்திரம் | வேலூர் |
| 101. | விசகண்டிகுப்பம் | வேலூர் |
| 102. | விடையூர் | திருவள்ளூர் |
| 103. | வெங்கல் | திருவள்ளூர் |
| 104. | வெள்ளத்துக்கோட்டை | திருவள்ளூர் |
| 105. | வேலியூர் | திருவள்ளூர் |
| 106. | வேளகாபுரம் | திருவள்ளூர் |
| 107. | ஸ்ரீராமபுரம் | திருவள்ளூர் |

# நுண் கற்காலம் (MICROLITHIC AGE)

**(கி.மு. 10,000 முதல் கி.மு. 3,000 வரை)**

தமிழகத்தின் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரைப் பகுதியிலும், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள செம்மண் தேரிகளிலும், மதுரை, தேனி, விருது நகர் மாவட்டங்களில் பாயும் சில காட்டாறுகளின் ஆற்றுப்படுகை களிலும் நுண்கற்கருவிகள் கிடைக்கின்றன. இவை செர்ட் (Chart), படிகக்கல் (Quartz), ஜாஸ்பர் (Jasper), கிரிஸ்டல் (Crystal), அகேட் (Agate), சால்சிடோனி (Chalcedony) போன்ற மிருதுவான கற்களால் செய் யப்பட்டுள்ளன. இக்கருவிகள் யாவும் உருவத்தில் மிகச் சிறியவை யாகவே காணப்படுகின்றன. வட்டுகள் (Ovats), சிறுகத்திகள் (Blades), சுரண்டிகள் (Scrappers), பிறைகள் (Lunates), அம்புமுனைகள் (Bifacial points) மற்றும் அரை வட்ட வடிவிலான தூண்டில்கள் போன்ற உருவங் களில் இக்கருவிகள் கிடைக்கின்றன. இவற்றை மரப்பிடிகளில் பொருத்தி நீண்ட கத்திகளாகவும், அரிவாள்களாகவும், ரம்பங்களாகவும் பயன்படுத்தினர்.

**வாழ்க்கை நிலை**

நுண்கற்கால மக்களும் நாடோடிகளாகவே வாழ்ந்துள்ளனர். ஆனால் இவர்கள் நெருப்பின் பயனை அறிந்திருந்தனர் எனத் தெரி கிறது. விலங்குகளை வேட்டையாடுவதுடன் மீன் பிடிக்கும் தொழிலை யும் இவர்கள் செய்ய ஆரம்பித்தனர். வேலைப்பாடமைந்த சிறு கற் கருவிகளைச் செய்வதையும் சிலர் தொழிலாகக் கொண்டிருந்தனர். விலங்கின் இறைச்சி, மீன், கிழங்கு போன்றவற்றைக் கொடுத்து பண்ட மாற்று முறையில் நுண்கற்கருவிகளை இவர்கள் பெற்றிருக்க வாய்ப் புண்டு. திருநெல்வேலி மாவட்ட கடற்கரை ஓரங்களிலும், இலங்கை கடற்கரை ஓரங்களிலும் ஒரே மாதிரியான நுண்கற்கருவிகள் கிடைப் பதால், இவ்விரு பகுதி மக்களும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந் தனர் எனவும் அறிய முடிகிறது.

# புதிய கற்காலம் (NEOLITHIC AGE)

## (கி.மு. 3,000 முதல் கி.மு. 1,000 வரை)

பழைய கற்காலத்தில் வழக்கிலிருந்த கரடுமுரடான கற்கருவிகளை விடுத்து, நன்கு தேய்த்து வழவழப்பாக்கி மெருகேற்றிய கற்கருவிகளைப் பயன்படுத்திய காலத்தைப் 'புதிய கற்காலம்' என அழைக்கின்றனர். இக்காலத்தில்தான் மனித இன வாழ்க்கை நிலையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. வரலாற்று ஆசிரியர்கள் இதனைப் 'புதிய கற்காலப் புரட்சி' (Neolithic Revolution) என அழைக்கின்றனர். தமிழகத்தில் வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மாவட்டங்களில் புதிய கற்கால இடங்கள் நிறைய காணப்படுகின்றன. மற்ற பகுதிகளில், புதிய கற்கருவிகள் சில இடங்களில் மட்டுமே கிடைக்கின்றன. குறிப்பாகத் தென்மாவட்டங்களில் புதிய கற்கருவிகள் கிடைப்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

இந்நிலையில் வேலூர் மாவட்டத்தில் பையம்பள்ளி என்னும் இடத்திலும் தர்மபுரி மாவட்டத்தில் மோதூர் என்னும் இடத்திலும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முள்ளிக்காடு, தைலமலை, தொகரபள்ளி, மல்லப்பாடி, மயிலாடும்பாறை ஆகிய இடங்களிலும் நடைபெற்ற அகழாய்வுகள் தமிழகத்தின் புதிய கற்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ள பெரிதும் துணைபுரிகின்றன. குறிப்பாக பையம்பள்ளி அகழாய்வில் புதிய கற்காலத்தின் இரண்டு கால கட்டங்கள் காணப் பட்டன. முதற்கால கட்டத்தில் வெளிர்சாம்பல் நிற மட்கலன்களும், எலும்புக்கருவிகளும், கற்கோடரிகளும், சிறு கற்கருவிகளும், அம்மிக் கற்களும், குழவிகளும், திரிகைக்கற்களும் கிடைத்தன.

இக்கால கட்டத்தில் வாழ்ந்த மக்கள் வட்டம் மற்றும் நீள்வட்ட வடிவில் குழிவீடுகள் (Pit dewellings) ஏற்படுத்திக் கொண்டு அவற்றின் மீது புல் வேய்ந்த கூரைகளை அமைத்துக் கொண்ட தற்கான அடையாளங்கள் காணப்பட்டன. இவற்றின் தரை தட்டைக்கற்களைக் கொண்டு பாவப்பட்டிருந்தன.

இரண்டாம் கால கட்டத்தில் வாழ்ந்த மக்கள் சாம்பல் நிற மட்கலன்களுடன் சிவப்பு நிற மட்கலன்களையும் பயன்படுத்தினர். இவை கையால் செய்யப்பட்டும், சக்கரத்தால் வனையப்பட்டும் காணப்பட்டன. இக்காலத்தில் குறுகிய மூக்குடைய கிண்ணங்களும் வழக்கத்திலிருந்தன. இரு பக்க கற்கோடரிகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. மல்லப்பாடி அகழாய்வு புதிய கற்கால கோடாரிகளையும், கையால் வனையப்பெற்ற சாம்பல் நிற மட்கலன்களையும் வெளிப்படுத்தியது.

மயிலாடும்பாறையில் 2003 -ஆம் ஆண்டில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் புதிய கற்காலத்தைப் பற்றி அரிய செய்திகள் கிடைத்துள்ளன. சாரணப்பன் கோயில் உச்சியில் உள்ள பாறைக்குகையில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த கையால் செய்யப்பட்ட சிறப்பு நிற மட்கலன்களும், பாறைக் கீறல்களும் கிடைத்தன. கருவோட்டுப்பள்ளம் என்ற இடத்தில் தோண்டப்பட்ட அகழ்வுக்குழியில் இரண்டு வீடுகளின் தரைப்பகுதிகள், வட்ட வடிவ குச்சி நடு குழிகள் (Post holes) கண்டுபிடிக்கப்பட்டன.

**வாழ்க்கைநிலை**

புதிய கற்கால மக்கள் தமக்கென்ன குடியிருப்புப் பகுதிகளை ஏற்படுத்திக் கொண்டு நிலையாக ஓரிடத்தில் வாழத் தலைப்பட்டனர். இவர்கள் குழிவீடுகளிலும், வட்டம் மற்றும் நீள் வட்ட வடிவிலான புல் வேய்ந்த கூரை வீடுகளிலும் வசித்தனர் என்பதைப் பையம்பள்ளி மற்றும் மயிலாடும்பாறை அகழாய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன.இவர்கள் கையால் செய்யப்பட்ட சாம்பல் மற்றும் சிவப்பு நிற மட்கலன்களை உபயோகப்படுத்தினர். இவர்கள்தான் முதலில் வேளாண்மை செய்ய ஆரம்பித்தனர் எனலாம்.

பையம்பள்ளி அகழாய்வில் கொள்ளு, கேழ்வரகு, பச்சைப்பயிறு ஆகிய தானியங்கள் மட்கிய நிலையில் காணப்பட்டன. இதன் மூலம் இம்மக்கள் மேற்கூறிய தானியங்களை விளைவித்தனர் எனக் கொள்ளலாம். இவர்கள் மாடு, ஆடு, புள்ளிமான், கோழி, பன்றி, காட்டுப்பூனை ஆகியவற்றை வளர்த்தனர். புதிய கற்கால மக்கள் இயற்கைத் தெய்வங்களுடன் பசுக்களையும் காளைகளையும் வழிபட ஆரம்பித்தனர்.

விவசாயத்தில் நல்ல விளைச்சலைப் பெறுவதற்காக வளமை வழிபாட்டையும் (Fertility cult) செய்தனர். தாய் தெய்வ வழிபாடு இக் காலத்தில்தான் தோன்றியது. இதற்குச் சான்று தருவது போல் ஆந்திர மாநிலத்தில் பிக்லிஹால் அகழாய்வில் தாய்த் தெய்வச் சுடுமண் உருவம் ஒன்று; கிடைத்துள்ளது. வேட்டையில் நிறைய விலங்குகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக இவர்கள் புதிய கற்காலக் கருவிகளையும் நிலத்தில் நட்டு வழிபட்டார்கள். இப்பழக்கம் இன்றளவும் தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்ட கிராமப் பகுதிகளில் காணப்படுகிறது. புதிய கற்கால மக்கள்தான் முதன் முதலில் இறந்தவர்களைத் தம் வீடுகளுக்கு அருகில் குழி தோண்டி அடக்கம் செய்யும் முறையை ஆரம்பித்தனர். இதனால் இறந்தவர் களையும் இவர்கள் தெய்வமாக வணங்கினர் எனத் தெரிகிறது.

# பெருங்கற்காலம் (MEGALITHIC AGE)
## (கி.மு. 1,000 முதல் கி.மு. 300 வரை)

பெருங்கற்கால மக்கள் தம் குடியிருப்புகளுக்கு வெளியே சற்று தூரத்தில் தனியாக ஓர் இடத்தை ஏற்படுத்திஅங்கு இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறையை ஆரம்பித்தார்கள். இவர்கள் இறந்தவர் களைப் புதைப்பதற்குப் பெருங்கற்களைப் பயன்படுத்திக் கல்லறை களை ஏற்படுத்தியதால் இக்காலம் 'பெருங்கற்காலம்' என அழைக்கப் படுகிறது. இவ்வாறு உண்டாக்கப்பட்ட ஈமச்சின்னங்களுக்கு 'பெருங் கற் சின்னங்கள்' என்று பெயர். இவர்கள் இரும்பை அதிகமாகப் பயன் படுத்தியதால் இக்காலம் '**இரும்புக்காலம்**' எனவும் அழைக்கப் பெறு கிறது. பெருங்கற் சின்னங்கள் பொதுவாகத் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றன.

## பெருங்கற் சின்ன வகைகள்

**கல் பதுக்கை** (Dolmonoid cist) ***(வ.ப. 7)***

இது தரைமட்டத்திற்கு மேல் அமைக்கப்பட்டது. இயற்கையாகக் கிடைக்கும் பெரிய கருங்கற்களைக் கொண்டு நான்கு புறங்களிலும் சுவர்போல் அமைத்து ஒரு சதுரமான அல்லது நீண்ட சதுரமான அறை உண்டாகப்பட்டது. இக்குழிவறையின் அடிப்பகுதியைக் கற்களைக் கொண்டு தரைபோல் அமைத்து அதன்மேல் ஈமப்பொருட்கள் வைக் கப்பட்டன. பிறகு மேலே ஒரு கற்பலகையைக் கொண்டு அறை மூடப் பட்டது. கல்லறைச் சுவர்களுக்கு ஆதரவாகச் சுற்றிலும் சிறு சுவர்கள் எழுப்பபப்பட்டன. மண், சிறுகற்கள் அல்லது கூழாங்கற்கள் ஆகிய வற்றைக் கொண்டு அறை மூடி மறைக்கப்பட்டது.

**கல்லறை** (Slabed cist) ***(வ.ப. 8,9)***

பூமியைச் சிறிது தோண்டி அதன் நாற்புறமும் நான்கு பலகைக் கற்களை நிறுத்தி ஒரு அறை உருவாக்கப்பட்டது. இப்பலகைக் கற்கள் சாயாமல் இருக்க ஒரு கல் இன்னொரு கல்லைத் தாங்கும் வகையில்

ஒவ்வொரு கல்லின் முனையும் ஒரு பக்கம் நீட்டி நிறுத்தப்பட்டது. இந்த அமைப்பு மேலேயிருந்து பார்ப்பதற்கு 'ஸ்வஸ்திகம்' போன்று தோற்றமளிக்கும். இவ்வறையில் ஈமப்பொருட்கள் இட்ட பிறகு, மேலே ஒரு பெரிய பலகைக்கல்லைக் கொண்டு அறை மூடப்பட்டது.

**கற்கிடை** (Cairn Circle)

ஆழமான குழியைத் தோண்டி அதனுள் ஈமத்தாழி அல்லது ஈமப்பேழை ஆகியவற்றோடு ஈமப் பொருட்களை வைத்து அதன் மீது மண் அல்லது கற்களைக் குவித்து வைப்பார்கள். இந்த ஈமக்குழியைச் சுற்றிலும் உருண்டையான கற்களை வட்டமாக வைத்து அமைக்கப் படும் ஈமச்சின்னத்தையே கற்கிடை அல்லது கல் வட்டம் என்று அழைப்பர்.

**ஈமத்தாழி** (Urn)

குவிந்த அடியும், அகன்ற வாயும் கொண்டு மிகப் பெரிய அளவி னதாக தோற்றமளிக்கும் சுடுமண்ணாலான ஈமத்தாழிகள் மண்ணுக் கடியில் புதைக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இவ்வகைத் தாழிகள் ஈமச்சடங்குக்காக, ஆழமான குழியினுள் ஈமப்பொருள்களுடன் வைத்துப் புதைக்கப்பட்டன.

**ஈமப்பேழை** (Sarcophagus) ***(வ.ப. 10)***

இவை சுடுமண்ணால் செய்யப் பெற்று நீண்ட பெட்டியைப் போன்ற தோற்றம் கொண்டவை. இப்பேழைகள் இரண்டு பகுதிளாக இருக்கும். கீழ்ப்பகுதி பல கால்களுடன் காணப்படும். மூடியாக விளங்கும் மேல்பகுதி ஆடு போன்ற விலங்குகளின் உருவங்களைக் கொண்டிருக்கும். ஆழமான குழியினுள் ஈமப்பேழையுடன் ஈமப்பொருட்களும் வைத்துப் புதைக்கப்பட்டன.

**கால்களுடைய சிறிய ஈமத்தாழி** (Legged Urn)

குறுகிய வாயும், சற்று அகலமான தோள் பகுதியும் மூன்று அல்லது ஐந்து கால்களும் கொண்ட சிறிய ஈமத்தாழியில், இறந்தவரின் உடலை எரித்து பின்னர் சேகரிக்கப்பட்ட சாம்பலை இட்டுப் புதைத்தனர்.

**வாழ்க்கை நிலை**

தமிழகத்தில் இதுவரை சுமார் 60-க்கும் மேற்பட்ட இடங்களில் உள்ள பெருங்கற் சின்னங்கள் அகழ்ந்தெடுத்து ஆய்வு செய்யப்

பட்டுள்ளன. இவ்வகழாய்வுகளின் மூலம் இம்மக்கள் நல்ல வளமான வாழ்வை மேற்கொண்டிருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

## சமூக வாழ்க்கை

பெருங் கற்கால மக்கள் தங்கள் வாழ்வின் பல்வேறு வசதிகளுக்காகப் பல தொழில்களைக் கற்று, அவற்றைத் திறம்படச் செய்துள்ளனர். அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட ஈமச்சின்னங்களில் மட்கலன்கள், இரும்பாலான பொருட்கள் போன்றவைதான் அதிக அளவில் கிடைக்கின்றன. இதிலிருந்து சக்கரத்தில் வைத்து வனையப்பட்ட மட்கலன்கள் செய்யும் மட்கலத் தொழிலும், இரும்புப் பொருட்கள் செய்யும் தொழிலும்தான் இக்கால மக்களின் முக்கியத் தொழில்களாக இருந்திருக்கின்றன என்று தெரிகிறது.

இவர்கள் ஊர்களை அமைத்துக் கொண்டு கூட்டமாக வாழ்ந்தனர். கூரை வீடுகளேயன்றி செங்கற்களாலான கட்டிடங்களைக் கட்டிக் கொண்டு வாழும் நாகரிக வாழ்க்கையையும் மேற்கொண்டிருந்தனர். வேளாண்மை முக்கியத் தொழிலாக இருந்திருக்கிறது. ஏரிகள், நீர்த் தேக்கங்கள் போன்றவற்றை ஏற்படுத்தி, அவற்றை வேளாண்மைக்கும் தம் அன்றாட வாழ்வின் உபயோகத்திற்கும் பயன்படுத்திக் கொண்டனர்.

ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் மற்றொரு கூட்டத்தின் மீது அடிக்கடி போர் தொடுத்தனர். எனவே, இவர்கள் வாழ்க்கையில் போர் முக்கிய பங்கு வகித்தது. பல வண்ணக் கல் மணிகளால் செய்யப் பெற்ற அணிகளை அணிந்தனர். சங்கு வளையல்களைப் பூண்டனர்.

## வழிபாட்டு முறை

இறப்பிற்குப் பின் உள்ள வாழ்க்கையில் பெருங்கற்கால மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இவர்கள் எழுப்பிய ஈமச் சின்னங்கள் இதைப் புலப்படுத்துகின்றன. ஈமச்சின்னங்களின் கிழக்குப் புறத்தில் காணப்படும் இடுதுளை (Port hole) ஞாயிறு வழி பாட்டைக் குறிக்கிறது. ஆதிச்சநல்லூரில் கிடைத்த சூலம், வேல் ஆகியவற்றைக் கொண்டு சிவ வழிபாடும் முருக வழிபாடும் இக்காலத்தில் பரவலாக இருந்துள்ளது என அறியலாம்.

தாய் தெய்வ வழிபாடு இவர்களிடையே மிகவும் சிறப்புற்றிருந்தது என்பதைக் குறிக்கும் வகையில் ஆதிச்ச நல்லூரில் உலோகத் தாலான சிறிய தாய் தெய்வ உருவமும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி


வட்டம் உடையாநத்தத்திலும், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம் மோட்டூரிலும் கல்லாலான தாய் தெய்வ உருவங் களும் கிடைத்துள்ளன.

**ஈமச்சடங்கு**

இவர்கள் பெரும்பாலும் இறந்தவர்களின் சடலத்தைத் திறந்த வெளியில் கிடத்திவிட்டு அதனுடைய சதைப்பற்று விலங்கு களாலும், பறவைகளாலும், இயற்கையாலும் அழிக்கப்பட்ட பிறகு எஞ்சியுள்ள எலும்புக்கூட்டை மட்டும் எடுத்துப் பெருங்கற் சின்னங்களில் புதைத்தனர். இது போன்ற பழக்கத்தை 'பார்சி' இனத்தவர் இன்றும் கடைப்பிடிப்பது குறிக்கத்தக்கது. இறந்தவர் களைத் தீயிலிட்டு எரித்த பின்னர் சாம்பலைச் சேகரித்து, அதனை மூன்று அல்லது ஐந்து கால்களுடைய சிறிய ஈமத்தாழிகளில் இட்டுப் புதைக்கும் பழக்கத்தையும் இவர்கள் கொண்டிருந்தனர்.

# தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்கால இடங்கள்

*(எண்கள் பட்டியலிலுள்ள இடங்களைக் குறிக்கும்)*



**தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்கால இடங்கள்**

| வ. எ. | ஊர் | மாவட்டம் | அகழாய்வு நடைபெற்ற ஆண்டு | தொல்பொருட்கள் |
|---|---|---|---|---|
| 1. | அப்புக்கல்லு | வேலூர் | 1977 - 1979 | மட்கலயங்கள், இரும்பாலான அம்பு முனைகள், கத்திகள், சுடுமண் மணிகள், சங்கு வளையல்கள். |
| 2. | அமிர்தமங்கலம் | திருவள்ளூர் | 1944 - 48 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், எலும்புகள். |
| 3. | அனுப்பானடி | மதுரை | 1887 | ஈமப்பேழைகள், மட்கலயங்கள் |
| 4. | ஆதிச்சநல்லூர் | தூத்துக்குடி | 1876, 2004 | ஈமத்தாழிகள், மட்கலன்கள், இரும்புப் பொருட்கள், தங்க அணிகள், வெண்கலம் மற்றும் செம்பு உருவங்கள், கல்மணிகள். |
| 5. | ஆரணிப்பட்டி | திருச்சி | 1934 - 35 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| 6. | ஆரோவில் | விழுப்புரம் | 1984-85 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், இரும்புப் பொருட்கள் |
| 7. | ஆனைமலை | கோவை | 1970 | கல் பதுக்கை |
| 8. | ஒடுகத்தூர் | வேலூர் | 1916 | இடுதுளையுடன் கல் பதுக்கை, மட்கலயங்கள், இரும்புக் கருவிகள் |
| 9. | கடமலைப்புத்தூர் | காஞ்சிபுரம் | 1908-09 | மூன்று கால்கள் உடைய ஈமத்தாழி, மட்கலயங்கள். |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | கடையநல்லூர் | திருநெல்வேலி | 1935-36 | மட்கலயங்கள், இரும்புப் பொருட்கள் |
| 11. | கம்பர்மேடு | நாகப்பட்டினம் | 1982-83 | குறியீடுகள், கருப்பு சிவப்பு வண்ண ஓடுகள். |
| 12. | கலையப்பட்டி | புதுக்கோட்டை | 1937 | ஈமச்சின்னங்கள் - கல் வட்டங்கள். |
| 13. | கல்லேரி மலை | வேலூர் | 1980 | கல் பதுக்கை, மட்கலயங்கள். |
| 14. | களக்குடிப்பட்டி | புதுக்கோட்டை | 1937 - 38 | கல் வட்டம், கல்லறை, மட்கலயங்கள். |
| 15. | கனரா பாளையம் | கோவை | 1913-14 | இடுதுளையுடன் கல்லறை, நான்கு கால்களுடன் ஈமத்தாழி |
| 16. | கனியாம்பூண்டி | கோவை | 1910-11 | மட்கலயங்கள் |
| 17. | கீழ்நத்தம் | திருநெல்வேலி | 1903-04 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், இரும்பு மற்றும் வெண்கலப் பொருட்கள் |
| 18. | கீழ்ப்பாக்கம் | சென்னை | 1934-35 | ஆறு கால்களுடன் ஈமப்பேழை, இரும்புப் பொருட்கள், மட்கலயங்கள். |
| 19. | குன்னத்தூர் | காஞ்சிபுரம் | 1955 - 58 | கல்வட்டம், ஈமப்பேழை, மூன்று கால் ஈமத்தாழி, இரும்புப் பொருட்கள், ஊரிருக்கைப் பகுதி. |
| 20. | குடிகாடு | கடலூர் | 1979 | கல்லறை, மட்கலயங்கள் |
| 21. | கொடுமணல் | ஈரோடு | 1985-86<br>1989-90<br>1997 | இரு துளையுடன் கல்லறைகள், மட்கலன்கள், கல்மணிகள், வெண்கல, செப்புப் பொருட்கள் ஊரிருக்கைப் பகுதி, குறியீடுகள். |

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | கொல்லூர் | விழுப்புரம் | 1876 | இடுதுளையுடன் கல்லறை |
| 23. | கொற்கை | தூத்துக்குடி | 1968-69 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், கல்மணிகள், சங்கு வளையல்கள், இரும்புப் பொருட்கள் |
| 24. | கோவலன் பொட்டல் | மதுரை | 1980 | ஈமத்தாழிகள், மட்கலன்கள், இரும்புப் பொருட்கள், கல்மணிகள், செம்பு மோதிரம், செப்புக்காசு, சங்கு வளையல்கள் |
| 25. | கோரிமேடு | பாண்டிச்சேரி | 1934-35 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், வெண்கல மற்றும் செப்புப் பொருட்கள் |
| 26. | சானூர் | காஞ்சிபுரம் | 1950-52 | கல் திட்டைகள், கல்லறைகள், ஈமப்பேழைகள், மட்கலயங்கள், குதிரை லாடம், இரும்புப் பொருட்கள் |
| 27. | சித்தன்னவாசல் | புதுக்கோட்டை | 1934-35 | கற்பதுக்கை, ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| | | | 1975-76 | இரும்புப் பொருட்கள் |
| 28. | சிறுமுகை | கோவை | 1913-14 | கல் வட்டங்கள், ஈமப்பேழைகள், ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| 29. | சூரந்தப்பட்டி | திருச்சி | 1934-35 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், சங்கு வளையல்கள் |
| 30. | சூலூர் | கோவை | 1946-47 | கற்பதுக்கை, மட்கலயங்கள். |

| | | | | |
|---|---|---|---|---|
| 31. | செட்டிப்பாளையம் | கோவை | 1946-47 | ஈமத்தாழிகள், ஆட்டுருவ மூடியுடன் கூடிய செப்புக்கிண்ணம். |
| 32. | சோத்துக்கேணி | பாண்டிச்சேரி | 1934-35 | 16 கால்களுடன் ஈமப்பேழை, குறியீடுகள், மட்கலயங்கள், வெண்கலக் கிண்ணங்கள் |
| 33. | தச்சம்பட்டி | திருச்சி | 1934-35 | தாழிகள், மட்கலயங்கள். |
| 34. | தாடம்பட்டி | மதுரை | 1888 | ஈமத்தாழிகள் |
| 35. | திருக்கட்டளை | புதுக்கோட்டை | 1917 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| 36. | திருத்து | திருநெல்வேலி | 1903-04 | ஈமத்தாழி, மட்கலயங்கள், கல்மணிகள், இரும்பு மற்றும் வெண்கலப் பொருட்கள். |
| 37. | திருப்பூர் | புதுக்கோட்டை | 1938-39 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| 38. | திருவக்கரை | கடலூர் | 1984-85 | கல்லறைகள், மட்கலயங்கள், பவளமணி, வெள்ளி வளையம், இரும்புப் பொருட்கள். |
| 39. | துவரை மான் | மதுரை | 1887 | ஈமத்தாழிகள் மட்கலயங்கள். |
| 40. | தொடையூர் | புதுக்கோட்டை | 1934-35 | ஈமத்தாழிகள், கல்லறைகள் |
| 41. | நத்தமேடு | பாண்டிச்சேரி | 1934-35 | ஈமத்தாழி, மட்கலயங்கள் |
| 42. | நல்லம்பட்டி | ஈரோடு | 1875 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| 43. | நாட்டுக்கல் பாளையம் | கோவை | 1889 | இடுதுளையுடன் கல்லறைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 44. | நிச்சாம் பாளையம் | ஈரோடு | 1875 | இடுதுளையுடன் கல்லறைகள், கல் வட்டங்கள் |
| 45. | பல்லாவரம் | காஞ்சிபுரம் | 1863 | ஈமத்தாழிகள், 16 கால்களுடன் ஈமப்பேழை, ஆறு கால்களுடன் ஈமத்தாழி, இரும்புப் பொருட்கள், சுடுமண் பொருட்கள். |
| 46. | பழநி மலை | திண்டுக்கல் | 1928 | கல்லறை, மட்கலயங்கள் |
| 47. | பறவை | மதுரை | 1888 | ஈமத்தாழிகள், இரும்புப் பொருட்கள், கல்மணிகள். |
| 48. | புல்வயல் | புதுக்கோட்டை | 1917 | ஈமத்தாழிகள், இரும்புப் பொருட்கள் |
| 49. | பெருமாள் மலை | மதுரை | 1940-41 | ஈமத்தாழிகள், மட்கலன்கள் |
| 50. | பேரூர் | கோவை | 1970-71 - 2002 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| 51. | பெரியநத்தம் | மதுரை | 1888 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| 52. | பையம்பள்ளி | வேலூர் | 1964-65 1967-68 | வட்ட வடிவக் குச்சி நடுகுழிகள், கற்களால் பாவப்பட்ட தரைப்பகுதி, மட்கலயங்கள் |
| 53. | மயிலாடும்பாறை | கிருஷ்ணகிரி | 2003 | கல் பதுக்கை, குறியீடுகளுடன் மட்கலயங்கள், இரும்பு அம்புமுனைகள், கத்தி, கோடாரி. |
| 54. | மல்லப்பாடி | கிருஷ்ணகிரி | 1978 | மட்கலயங்கள் |
| 55. | மலையாம்பட்டு | வேலூர் | 1970-71 | மட்கலயங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 56. | மாகிநாய்க்கன் பாளையம் | கோவை | 1889 | கல்வட்டங்கள், கல்லறைகள், மட்கலயங்கள் |
| 57. | முத்தராபாளையம் | பாண்டிச்சேரி | 1934-35 | ஈமத்தாழிகள், குறியீடுகளுடன் மட்கலயங்கள் |
| 58. | மேல்சாத்தமங்கலம் | பாண்டிச்சேரி | 1983 | மட்கலயங்கள் |
| 59. | மோட்டூர் | திருவண்ணாமலை | | 1978-79 தாய் தெய்வக்கல், இரு துளையுடன் கல்லறை ஈமப் பேழைகள், மட்கலயங்கள் |
| 60. | வரிக்கல் | விழுப்புரம் | 1903-04 | கற்கிடை, மட்கலயங்கள் |
| 61. | தாண்டிக்குடி | திண்டுக்கல் | 2004 | தாழி, கல் பதுக்கை, 50-க்கு மேற்பட்ட மட்கலன்கள்,இரும்பு வாள்கள், கத்திகள், 350-க்கும் மேற்பட்ட சூதுபவளமணிகள், பளிங்குக் கல் மணிகள். |

# குறியீடுகள்
## (GRAFFITI MARKS)

பெருங்காலத்தைச் சேர்ந்த மட்கலயங்களில் பலவகையான குறியீடுகள் காணப்படுகின்றன. இக்குறியீடுகள் எதைக் குறிக்கின்றன என்பதற்குக் கீழ்கண்டவாறு கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

1. பல குயவர்கள் ஒன்றுசேர்ந்து தங்களது பானைகளை ஒரே சூளையில் இடும்போது தங்கள் மட்கலயங்களைப் பிரித்துக் கொள்வதற்குக் குறியீடுகள் இட்டுக் கொள்வது உண்டு. எனவே இதைக் குயவர் குறி எனக் குறிப்பர். ஆனால் பெரும்பாலும் இக்குறியீடுகள் கலயங்கள் சுட்ட பின்னர் பொறிக்கப்பட்டவை. கலயங்கள் சுடப்பட்ட பின்னர் குயவர்கள் குறியீடுகள் பொறிப்பது தேவையில்லாதது.

2. மட்கலயங்களை வாங்கிப் பயன்படுத்தியவர்கள் தங்களது உடைமை எனக் குறிக்க குறி இடுவதுண்டு. எனவே, இவற்றை உடைமைக் குறி என்றும் கூறலாம். சில கலயங்களில் சுடுவதற்கு முன்பே குறியீடு பொறிக்கப்பட்டுள்ளது. கலயங்களைச் சுடுவதற்கு முன்னர் உடைமைக் குறி பொறிப்பது இயலாததாகும்.

3. இக்குறியீடுகள் மட்கலயங்கள் மட்டுமின்றி பாறைக்கீறல்கள் மற்றும் பாறை ஓவியங்களிலும் காணப்படுகின்றன. இவற்றை பிராமி எழுத்துக்களின் முன்னோடியாகவும் கொள்ளலாம். சில கல்வெட்டுகளிலும் அழகன்குளம், கொடுமணல் ஆகிய இடங்களில் கிடைக்கும் சில பானை ஓடுகளிலும், பிராமி எழுத்துக்களுடன் குறியீடுகளும் சேர்ந்து காணப்படுவது இக்கருத்தினை வலியுறுத்துகிறது.

4. பெருங்கற் சின்னங்களில் ஒரே மாதிரியான ஒரு குறியீடு மட்டும் பொறித்த மட்கலயங்கள் அதிகமாக கிடைக்கின்றன. கொத்த

பாளையத்தில் (கரூர் மாவட்டம்) ஒரு குறிப்பிட்ட தாழியிலிருந்து சேகரிக்கப்பட்ட மட்கலயங்களில் ஒரே மாதிரியான குறியீடு மட்டுமே காணப்படுகிறது. இது ஒரு கூட்டம், குலம் அல்லது இனத்தைக் குறிக்கும் (Totemic symbol) குறியீடாக இருக்கலாம்.

இவை எதைக் குறிக்கின்றன என்பதைப் பற்றி உறுதியாக அறிவதற்கு போதுமான குறியீடுகள் இதுவரைக் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர் கள் பல்வேறு கருத்துகளை கூறி வருகின்றனர். இக்கருத்துகளையும் முழுமையாக ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஆக, இனிவரும் அகழாய்வுகள் வெளிப்படுத்தும் குறியீடுகளையும் சேர்த்துக் கொண்டு விரிவான பகுப்பாய்வு மேற்கொண்டால் ஓரளவிற்கு தெளிவு பெறலாம்.

# தொல்பழங்கால ஓவியங்கள்
## (Prehistoric Paintings)

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறையினர் 1980 ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம் மல்லப்பாடிக்கு அருகில் மலையில் அமைந்துள்ள இயற்கையான குகைக்தளத்தின் பாறையில் இரண்டு குதிரை வீரர்கள் போரிடும் காட்சியைக் காட்டும் வெண்ணிற ஓவியம் ஒன்றைக் கண்டுபிடித்தனர். இது புதிய கற்காலத்தைச் சேர்ந்த தொல்பழங்கால ஓவியமாக இருக்கலாம் என அவர்கள் கூறினர். பின்னர் 1982-ஆம் ஆண்டில் விழுப்புரத்திற்கு அருகில் கீழ்வாலை என்னுமிடத்தில் உள்ள மலைக்குன்றில் இதுபோன்ற ஓவியங்களை ஆசிரியர்கள் குழு ஒன்று கண்டுபிடித்தது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தொடர்ச்சி யாகத் தீவிர கள ஆய்வு மேற்கொண்டு செத்தவரை, ஆலம்பாடி, பாடி யந்தல், புறாக்கல் போன்ற பல்வேறு இடங்களில் இத்தகைய ஓவியங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தனர். இதன் பின்னர் ஆய்வாளர் களுக்கிடையில் தொல்பழங்கால ஓவியங்கள் குறித்து அறிவதில் பெரும் ஆர்வமும் விழிப்புணர்வும் ஏற்பட்டன.

இதன் பயனாகத் தமிழகத்தில் விழுப்புரம், வேலூர், மதுரை, திண்டுக்கல், தேனி, புதுக்கோட்டை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் 65 ஊர்களில் உள்ள மலைகளில் காணப்படும் இயற்கையாக அமைந்த குகைத்தளங்களின் பாறைகளில் செங்காவிக்கட்டி மற்றும் சுண்ணக் கட்டி ஆகியவைக் கொண்டு தீட்டப்பட்ட இதுபோன்ற ஓவியங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

பலவகை விலங்குகள்,மனிதர்கள் போரிடுவது, வேட்டையாடு வது, நடனமாடுவது, சடங்குகள் செய்வது, இறைவழிபாடு செய்வது போன்ற காட்சிகளும் பல்வேறு வடிவங்களில் அலங்காரக் கோடுகள்,

குறியீடுகள் ஆகியவையும் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. இந்த ஓவியங்கள் வரையப்பட்டதன் நோக்கம் குறித்து பல்வேறு கருத்துகள் கூறுப்படுகின்றன.

1. இயற்கையிலேயே கலை ஆர்வம் உள்ள மனிதர்களின் வெளிப்பாடுதான் இந்த ஓவியங்கள் வரைய காரணமாக இருக்கலாம்.

2. அவர்கள் குடியிருந்த குகைளுக்கு முன்னால் திரிந்துக் கொண்டிருந்த விலங்குகளின் உருவங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கிலும் இவை வரையப்பட்டிருக்கலாம்.

3. அழகான இயற்கைக் காட்சிகளை நேசித்த இவர்கள் தங்களுடைய குகைகளை அழகு செய்ய வேண்டும் என்ற எண்ணம் காரணமாகவும் ஓவியங்களை வரைந்திருக்கலாம்.

4. தொடர்ந்து உணவுப் பொருட்கள் கிடைக்க வேண்டும் என்ற நம்பிக்கையை உறுதி செய்வதற்காகவும் இவை வரையப்பட்டிருக்கலாம்.

இத்தகைய ஓவியங்கள் வரைவதற்கு இயற்கையாக கிடைக்கும் சுண்ணக்கட்டிகள், செங்காவிக் கட்டிகள், கரித்துண்டுகள் போன்றவை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி வண்ணக் கட்டிகளை நன்கு தூளாக்கி எலும்பு அல்லது மூங்கில் மரத்தாலான குழாய்களில் சேமித்து வைத்துக் கொண்டனர். இந்த தூளோடு வேட்டையாடப்பட்ட விலங்குகளிடமிருந்து எடுக்கப்பட்ட கொழுப்புப் பொருட்களைக் கலந்து, பூசுவதற்கு உரிய பல வண்ணங்களை உருவாக்கினர். இந்த வண்ணங்கள் இவை தீட்டப்பட்ட பாறைகளைப் போலவே நிலைத்து நிற்பவையாகத் திகழ்கின்றன. இதில் பயன்படுத்தப்பட்ட விலங்கின் கொழுப்புத் தன்மையே இந்த ஓவியங்கள் நீடித்து நிற்பதற்கு காரணமாகத் திகழ்ந்திருக்க வேண்டும்.

இவ்வோவியங்களைப் பாறைகளில் தீட்டுவதற்கு முன்பு வெளிக்கோடுகள் வரைந்து கொண்டனர். பின்னர் இதன் மீது கொழுப்போடு கலந்த வண்ணக்கலவையைத் தீட்டினார்கள். தமிழகத்தில் சில பகுதிகளில் காணப்படும் ஓவியங்களின் வெளிக்கோடுகள் சிவப்பு வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன. அவற்றுள் சில உருவங்களின் உள் பகுதி முழுவதும் வெண்ணிறத்தால் நிரப்பப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். இவை தவிர வெளிக்கோடுகளும் சில உறுப்புகளைக் காட்டும் உட்கோடுகளும் சிவப்பு வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன. வண்ணங்களைத்

தீட்டுவதற்கு மிருகங்களின் அடர்ந்த ரோமங்களும், பறவைகளின் இறகுகளும் தூரிகைகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடும்.

குகைகளின் பாறைகளில் ஓர் ஓவியத்தின் மீது மற்றொரு ஓவியம் வரையப்பட்டிருப்பது ஆய்விற்குரிய ஒன்றாகும். இது தொடர்ந்து அந்த குகைகளில் மனிதர்கள் புழங்கியதைக் காட்டுகின்றது.

இந்த ஓவியங்களின் எளிமை, நீடித்து நிலைக்கும் தன்மை, காட்சிகளின் தொகுப்பு, கலையழகு போன்றவை வியப்புக்குரியன. இவை பெரும்பாலும் இயற்கையாக அமைந்துள்ள குகைத்தள பாறைகளிலேயே வரையப்பட்டுள்ளன.

## ஓவிய உருவங்கள் பற்றிய விளக்கம்

### 1. விலங்கினங்கள் மற்றும் பறவைகள்

மான், குதிரை, யானை, பன்றி, முள்ளம்பன்றி, ஆடு, வரையாடு, மாடு, பசு, காட்டுப்பூனை, உடும்பு, பாம்பு, மயில், அன்னம், கொக்கு, கோழி போன்ற விலங்கினங்கள் மற்றும் பறவை களின் உருவங்கள்தான் அதிக அளவில் ஓவியங்களாக வரையப் பட்டுள்ளன. ஒருவன் வேட்டைக்கு செல்லும்முன் எந்த விலங்கின் ஓவியத்தை வரைந்து விட்டு செல்கிறானோ அந்த விலங்கு அவனுக்கு வேட்டையில் கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் இவ்வாறு நிறைய விலங்கின ஓவியங்கள் வரையப்பட்டிருக்கலாம். பொதுவாக இந்த ஓவியங்கள் காணப்படும் குகைத்தளங்ளில் நிலையாக குடியிருக்க இயலாது.

எனவே, இம்மக்கள் வேட்டைக்கு செல்லும் முன்னரோ அல்லது வேட்டைக்கு பின்னரோ இக்குகைக்கு வந்து ஓவியங்கள் வரைந்து செல்லும் வழக்கத்தை ஒரு சடங்காக கொண்டிருந் திருக்கலாம். மேலும் இக்குகையில் தெய்வம் குடி கொண்டிருப்ப தாகவும், இங்கு வந்து ஓவியங்கள் வரைந்து பூசைகள் செய்தால் அதிக விலங்குகள் வேட்டையில் கிடைக்கும் என்றும் நம்பி யிருக்கக்கூடும். அவ்வப்போது இங்கு தெய்வத்திற்கு விலங்குகள் அல்லது பறவைகளைப் பலியிட்டு படையல் இட்டார்கள் என்று கருதலாம். இதற்குச் சான்றாக இப்பொழுதும் இக்குகைளுக்கு அருகில் வசிக்கும் மக்கள் ஆண்டுதோறும் இங்கு ஆடு அல்லது கோழி போன்றவற்றைப் பலியிட்டு பொங்கல் படைப்பதைக் காணலாம்.

## 2. வேட்டைக்காட்சிகள்

வேட்டையாடுதல் புதிய கற்காலம் மற்றும் பெருங்கற்கால மக்களின் முக்கியத் தொழிலாக விளங்கியது இதனை விளக்கும் வகையில் தனி மனிதன் அல்லது பலர் சேர்ந்து வேட்டையாடுவது போன்ற காட்சிகள் வரையப்பட்டுள்ளன.

## 3. விலங்கினத் தலையுடன் மனித உருவங்கள்

இவ்வோவியங்களில் விலங்கு அல்லது பறவையின் தலையுடன் மனிதர்கள் இருப்பது போன்று காணப்படுகிறது. விலங்கு அல்லது பறவையின் தலை முகமூடியை அணிந்துக் கொண்டு சடங்குகள் செய்யும் மனிதர்களை இது குறிக்கலாம். ஆலம்பாடி ஓவியத்தில் முகமூடி தனியாக வரையப்பட்டுள்ளது.

## 4. நடனக் காட்சிகள்

வேட்டைக்காரன் மலை, கீழ்வாலை, நீலகிரி ஓவியங்களில் குழு நடனக் காட்சிகள் காணப்படுகின்றன. இது இனக்குழு மக்களின் வழிபாடு தொடர்பான நடனக்காட்சிகள் எனலாம்.

## 5. போரிடுதல்

இவ்வோவியங்கள் காட்டும் சண்டைக் காட்சிகள் அக்கால இனக்குழுக்களிடையே நடந்த போர்க்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

## 6. கை வடிவம்

குகை ஓவியங்களில் கை வடிவங்கள் நிறைய காணப்படுகின்றன. இது குகைகளுக்கு தங்கள் வருகையைப் பதிவு செய்வதற்காகவும் அல்லது ஓவியங்கள் வரையும் போது கைகளில் ஒட்டியுள்ள வண்ணத்தை அப்படியே பாறையில் அடித்து பதிவு செய்வதற்காகவும் இருக்கலாம்.

## 7. படகுக் காட்சிகள்

படகில் துடுப்பு கொண்டு பயணம் செய்யும் ஓவியங்கள் மூலம் அக்கால மக்கள் படகில் பயணம் செய்துள்ளனர் என அறியலாம்.

## 8. குறியீடுகள்

இப்பாறை ஓவியங்களில் கீழ்வாலை, புறாக்கல், மல்ல சமுத்திரம், பொதிகை மலை, தாளப் பள்ளி, திருமால்பாடி, குருவி

நாயனப் பள்ளி, மல்லசந்திரம், முடிப்பி நாயனப் பள்ளி, ஒப்பந்தவாடி, ஒதிகுப்பம் ஆகிய இடங்களில் பல்வேறு வடிவக் குறியீடுகள் காணப்படுகின்றன. இக்குறியீடுகள் சிந்து சமவெளி குறியீடுகளை ஒத்திருந்தாலும் அவை போன்று வரிசையாக அமைந்து ஒரு குறிப்பிட்டச் செய்தி அல்லது சொல்லைக் குறிப்பது போல இல்லை.

இவை பாறைகளில் ஆங்காங்கு எவ்விதத் தொடர்புமின்றியுள்ளன. மேலும் இவை பெரும்பாலும் சித்திர குறியீடுகளைப் போன்றே காணப்படுகின்றன. சில இடங்களில் ஒரே மாதிரியான குறியீடுகள் வரிசையாக கோட்டுருவங்களாக வரையப்பட்டுள்ளன. இவை ஒரு கருத்தை அல்லது செய்தியை தெரிவிப்பதாகக் காணப் பட்டாலும் அது கூறும் செய்தியைப் பற்றி விவரமாக அறிய முடிய வில்லை. பெரும்பாலும் இக்குறியீடுகள் மனித உருவின் பல்வேறு வடிவங்களாகவே உள்ளன. இவை கூறும் செய்திகள் மனித வாழ்வின் வளமைக்கு .செய்யப்படும் நம்பிக்கை அடிப்படையிலான சடங்குகளை குறிப்பதாகக் கொள்ளலாம். எனினும் கீழ்வாலையில் ஓவியங்களுக்குக் கீழ் வரிசையாக வரையப்பட்டுள்ள ஐந்து குறியீடுகளுக்கு ஹரப்பன் குறியீடுகளோடு ஒப்புமைப்படுத்தி அறிஞர் தரும் விளக்கம் ஓவிய காட்சிகளுக்கு ஓரளவு ஒத்துப்போகிறது.

### 9. காலம்

பொதுவாக இந்த ஓவியங்களில் விலங்குகளை வேட்டையாடு தல், மனிதர்கள் தமக்குள் போரிட்டுக் கொள்ளுதல் போன்ற காட்சிகளே அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. வேளாண்மையும், வேட்டையாடுதலும் பெருங்கற்கால மக்களின் முக்கியத் தொழில்களாக விளங்கின. இக்காலத்தில்தான் இனக்குழுக்கள் தோன்றின. தங்களின் மேலாண்மையை நிலை நிறுத்திக் கொள்ள அடிக்கடி இக்குழுக்களிடையே போர் நிகழ்ந்தது.

எனவே, போர் காட்சிகளும் இங்கு ஓவிய்ங்களாக வரையப்பட் டுள்ளன. போரில் வென்றபின் குகைத் தெய்வங்களுக்குப் பலியிடு தலும், படையல் இடுவதும் செய்தனர் எனலாம். இதற்கான சடங்குக் காட்சிகளும் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. எனவே, தமிழகத்தில் காணப்படும் ஓவியங்கள் யாவும் பெருங்கற்காலத்தைச் சேர்ந்ததாகக் கூறலாம்.

மேலும் இவ்வோவியங்கள் காணப்படும் குன்றுகளின் அடி வாரங்களில் அதிக அளவில் பெருங்கற் சின்னங்கள் காணப்


படுவதும், குகைத்தளங்களில் பெருங்கற்கால கருப்பு சிவப்பு வண்ணப்பானை ஓடுகள் (Black and Red ware) கிடைப்பதும், மகாராஜகடை, மல்லசமுத்திரம் ஆகிய இடங்களில் உள்ள பெருங்கற் சின்ன கல்லறைகளில் (Slabed cists) இத்தகைய ஓவியங்கள் வரையப்பட்டிருப்பதும், இவை பெருங்கற்காலத்தைச் (கி.மு. 1,000 முதல் கி.மு. 300 வரை) சேர்ந்தவை என்பதையே வலியுறுத்துகின்றன.

***தமிழகத்தில் தொல்பழங்கால ஓவியங்கள் காணப்படும் இடங்கள்:***

| *வ. எண்.* | *ஊர்* | *மாவட்டம்* |
|---|---|---|
| 1. | அணைப்பட்டி | மதுரை |
| 2. | அப்புக்கல் | வேலூர் |
| 3. | அழகர்மலை | மதுரை |
| 4. | அட்டக்குட்டை | கிருஷ்ணகிரி |
| 5. | அங்கனநாச்சி மலை | கிருஷ்ணகிரி |
| 6. | ஆலங்காயம் | வேலூர் |
| 7. | ஆண்டிமலை | தர்மபுரி |
| 8. | ஆலம்பாடி | விழுப்புரம் |
| 9. | இரத்தினகிரி | வேலூர் |
| 10. | ஒப்பந்தவாடி | கிருஷ்ணகிரி |
| 11. | ஒதியத்தூர் | விழுப்புரம் |
| 12. | ஒதிகுப்பம் | கிருஷ்ணகிரி |
| 13. | கரிக்கியூர் | நீலகிரி |
| 14. | கருங்காலக்குடி | மதுரை |
| 15. | காமயகவுண்டன் பட்டி | தேனி |
| 16. | கிடாரிப்பட்டி | மதுரை |
| 17. | கீழ்வாலை | விழுப்புரம் |
| 18. | குருவிநாயனப்பள்ளி | கிருஷ்ணகிரி |
| 19. | குளிர்ச்சுனை | விழுப்புரம் |
| 20. | குமுதிப்பாடி | கோவை |
| 21. | கொணவக்கரை | நீலகிரி |

# தமிழகத்தில் தொல்பழங்கால ஓவியங்கள் காணப்படும் இடங்கள்

**(எண்கள் பட்டியலிலுள்ள இடங்களைக் குறிக்கும்.)**



| வ. எண். | ஊர் | மாவட்டம் |
|---|---|---|
| 22. | கொல்லூர் | விழுப்புரம் |
| 23. | சருகு | தருமபுரி |
| 24. | சந்திரபுரம் | வேலூர் |
| 25. | சண்டே குப்பம் | தர்மபுரி |
| 26. | சாத்தூர் | வேலூர் |
| 27. | சிறுமலை | திண்டுக்கல் |
| 28. | சிவநாதபுரம் | வேலூர் |
| 29. | சின்னபாலபாக்கம் | வேலூர் |
| 30. | செத்தவரை | விழுப்புரம் |
| 31. | சென்னராயன்பள்ளி | வேலூர் |
| 32. | சையதுபாஷா மலை | கிருஷ்ணகிரி |
| 33. | தட்டக்கல் | கிருஷ்ணகிரி |
| 34. | திருமலை | மதுரை |
| 35. | திருமயம் | புதுக்கோட்டை |
| 36. | திருமல்பாடி | விழுப்புரம் |
| 37. | திருவாதவூர் | மதுரை |
| 38. | தாளப்பள்ளி | கிருஷ்ணகிரி |
| 39. | தாலப்பட்டி | கிருஷ்ணகிரி |
| 40. | தெங்குமராட்டா | ஈரோடு |
| 41. | தொண்டூர் | விழுப்புரம் |
| 42. | நாகமலை | மதுரை |
| 43. | நாகல் | வேலூர் |
| 44. | நாயனூர் | விழுப்புரம் |
| 45. | நெகனூர்பட்டி | விழுப்புரம் |
| 46. | பாடியந்தல் | விழுப்புரம் |
| 47. | புறாக்கல் | விழுப்புரம் |
| 48. | பூங்குளம் | வேலூர் |
| 49. | பையம்பள்ளி | வேலூர் |

| வ. எண். | ஊர் | மாவட்டம் |
|---|---|---|
| 50. | மகாராஜக்கடை | கிருஷ்ணகிரி |
| 51. | மசினக்குடி சீகூர் | நீலகிரி |
| 52. | மயிலாடும்பாறை | கிருஷ்ணகிரி |
| 53. | மல்லசந்திரம் | கிருஷ்ணகிரி |
| 54. | மல்லசமுத்திரம் | கிருஷ்ணகிரி |
| 55. | மல்லப்பாடி | கிருஷ்ணகிரி |
| 56. | முடிப்பிநாயனப்பள்ளி | கிருஷ்ணகிரி |
| 57. | முத்துப்பட்டி | மதுரை |
| 58. | மூங்கில்புதூர் | கிருஷ்ணகிரி |
| 59. | மேல்பட்டி | வேலூர் |
| 60. | மோயர் பள்ளத்தாக்கு | நீலகிரி |
| 61. | யானைகுண்டு | வேலூர் |
| 62. | வுணங்கப்பழம் | நீலகிரி |
| 63. | வெள்ளரிக்கோம்பை | நீலகிரி |
| 64. | வேட்டவலம் | விழுப்புரம் |
| 65. | வேட்டைக்காரன் மலை | கோவை |
| | **பாறைக்கீறல்கள் காணப்படும் இடங்கள்** | |
| 1. | பொதிகை மலை | திருநெல்வேலி |
| 2. | பெருமுக்கல் | விழுப்புரம் |
| 3. | மயிலாடும்பாறை (சாரணப்பன் கோவில்) | தர்மபுரி |
| 4. | குற்றாலப்புடை | திருநெல்வேலி |

# பூண்டி அகழ்வைப்பகம்

இந்தியாவிலேயே பூண்டிக்கு அருகிலுள்ள அதிரம்பாக்கதில் தான் அதிக அளவில் பழைய கற்கால கருவிகள் கிடைக்கின்றன. இங்கு அண்மையில் (2002 - 03) மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் பழைய கற்காலத்தின் மூன்று காலகட்டங்களைச் சேர்ந்த கற்கருவிகள் துல்லியமான படிவடுக்குகளில் கிடைப்பது மிகவும் சிறப்பானாகும். எனவே அத்திரம்பாக்கம் இந்தியாவை மட்டுமின்றி உலக தொல்லியல் அறிஞர்களின் கவனத்தையும் கவர்ந்துள்ளது என்றால் அது மிகை யாகாது. பூண்டியைச் சுற்றியுள்ள கொற்றலை மற்றும் ஆரணி ஆறுகளின் சமவெளிப் பகுதியில் ஏறத்தாழ 107 ஊர்களில் பழைய கற் கருவிகள் கிடைப்பது மிகவும் அரிதானதாகும். ஈதன்றி, பூண்டிக்கு மேற்கே பத்து கி.மீ. தூரத்தில் உள்ள அல்லிக்குழி மலைத்தொடரில் குடியம் என்னும் ஊருக்கருகில் பழைய கற்கால மக்கள் வசித்த 16 குகைகள் காணப்படுவது மிகவும் முக்கியமானதாகும். ***(நிழற்படம் -2)***

எனவே, இப்பகுதியின் கற்காலச் சிறப்பைப் பொதுமக்கள் அறி யும் வண்ணம் தொல்லியல் அகழ்வைப்பகம் ஒன்றை அமைப்பது மிக வும் அவசியம் எனத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கருதியது. இதற்காகச் சுற்றுலாச் சிறப்புமிக்க இடமாகத் திகழும் பூண்டியில் இயற்கை அழகுடன் கூடிய ஒரு பரந்த இடத்தில் நிலையான அகழ் வைப்பகம் ஒன்றினை 1985 ஆம் ஆண்டில் நிறுவி செயல்படுத்தி வருகிறது. ***(நி.ப. – 1)***

இந்த அகழ்வைப்பகத்தில் பழைய கற்கால கருவிகள் உரிய விளக்கங்களுடன் சிறப்பாகவும், நுண்கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற்காலம் ஆகியவற்றைச் சேர்ந்த பிற தொல்பொருட்கள் அழகாகவும் காட்சிப் பெட்டிகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும், இவ்வகழ்வைப்பகத்திற்குச் சிறப்பு சேர்க்கும் வண்ணம் பழைய கற்கால மனிதர்களின் ஆளுயர மாதிரி சிலைகள் நான்கும், பாறை குகை அமைப்பு ஒன்றும் 'தொல்மாந்தர் வாழ்வகம்' என்னும் பெயரில் மாதிரியாக 1993 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளன. ***(நி.ப. – 3, 4)***

தொல் பழங்காலத்தைப் பற்றி மட்டும் தனியாக விளக்கும் வகையில் பழைய கற்கருவிகள் அதிகமாக கிடைக்கும் பகுதியில் அமைந்த தொல்லியல் அகழ் வைப்பகம் (Prehistory site Museum) இந்தியாவிலேயே இது ஒன்றுதான் எனலாம். பூண்டியைச் சுற்றியுள்ள பழைய கற்கால இடங்களை ஆய்வு செய்யவரும் தொல்லியல் மாண வர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் இந்த அகழ்வைப்பகம் விளங்குகிறது.

பூண்டி அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொல்பொருட்கள் குறித்த விளக்கம் கீழ் வருமாறு:

## பழைய கற்காலப் பிரிவு

கொற்றலையாற்றுப் பகுதியில் படிகக்கல் வகையைச் சேர்ந்த கூழாங்கற்கள் மிக அதிகமாகக் கிடைக்கின்றன. இக்கற்களைக் கொண்டு இங்கு வாழ்ந்த மக்கள் பல வகையான கருவிகள் செய்து அவற்றைத் தம் வாழ்வின் பல உபயோகங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். இப்பகுதியிலுள்ள அத்திரம்பாக்கம், நம்பாக்கம், குடியம், பரிக்குளம் மற்றும் வடமதுரை போன்ற இடங்ளிலிருந்து சேகரித்து வரப்பட்ட கற்கருவிகள் இங்குக் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. ***(நி.ப. – 5)***

## காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கற்கருவிகளும் அதன் பயன்களும்:

**1. அபவில்லியன் கைக்கோடரிகள்** ***(வரைபடம் – 1) (நி.ப. 9)***
(Abbevillian Hand axe)

வட மதுரையில் கிடைக்கும் கைக்கோடரிகள் அபவில்லியன் (பிரான்சு நாட்டில் உள்ள ஓர் இடம்) வகையைச் சேர்ந்தவை. இவை பேரிக்காய்போன்ற வடிவமுடையதாக இருக்கும். ஒரு புறம் கையால் பிடிப்பதற்கு ஏற்றவாறும், மற்றொரு புறம் கூர்மையாகவும் அமைந் திருக்கும் சில்லுகள் பெயர்த்தெடுக்கப்படாமல் இருக்கும் பாகம் எலும்புகள், காய்கள் போன்றவற்றை நசுக்குவதற்கும், கூர்மையான பக்கங்கள் விலங்குகளின் தோலை உரிப்பதற்கும் பயன்பட்டன.

**2. அசூலியன் கைக்கோடரிகள்** ***(வரை. ப. 1)***

இவ்வகைக் கோடரிகள் முட்டை வடிவில் இருக்கும். வடிவில் சிறுத்தும், நடுபுறம் குவிந்தும் சுற்றிலும் கூர்முனையுடையதாகவும் காணப்படும். ஈட்டி போன்ற வடிவுள்ள கைக்கோடரிகளும் இவ் வகையைச் சேர்ந்தவையே. இவை விலங்குகளின் தோலை உரிப்

பதற்கும்,மரக்கிளைகளை வெட்டுவதற்கும், நிலத்தை தோண்டுவ தற்கும் பயன்பட்டன. *(வ.ப. – 2)* ஈட்டி போன்ற வடிவுடைய கைக்கோடரிகளை மரப்பிடியின் நுனியில் மரப்பட்டை அல்லது விலங்கின் நரம்பைக் கொண்டு கட்டி வேல் போல் பயன்படுத்தலாம். *(வ.ப. – 3)*

### 3. ஆமை வடிவக் கோடரி (Micoquin Hand axe) *(நி.ப. 10)*

பிரான்சு நாட்டில் உள்ள மிக்கா குயின் என்னும் இடத்தில் கிடைத்த இவ்வகை கோடரிகள் தற்போதைய மண்வெட்டி போன்று மரப்பிடியை நுழைப்பதற்கு ஏற்ற நீண்ட நாக்குப் பகுதியைக் கொண்டு வட்ட வடிவில் அகலமாகக் காணப்படும். இது நிலத்தை தோண்டுவதற்குப் பயன்பட்டது.

### 4. கிழிப்பான்கள் (Cleavers) *(நி.ப. 8)*

இவை இன்றைய கோடரி போன்ற தோற்றம் கொண்டவை. இவற்றின் மேல்பாகம் தட்டையாகவும், சுற்றிலும் கூர்மையான விளிம்புகள் கொண்டும் இருக்கும். இவற்றை மரப்பிடியில் பொருத் தினால் கோடரி போன்று மரம் வெட்டப் பயன்படும். விலங்குகளின் தோலை உரிக்கவும், மரப்பட்டைகளைச் சீவவும் இவை பயன்பட்டன.

### 5. சுரண்டிகள் (Scrappers):

இவை முட்டை வடிவில் கூர்மையான பக்கங்களைக் கொண்டிருக்கும். நீளமான சுரண்டிகளும் உண்டு. மரப்பட்டைகளை உரிப்பதற்கும், விலங்குகளின் – இறைச்சியைச் சுரண்டுவதற்கும் இவை பயன்பட்டன.

### 6. வட்டுகள் (Dicoids) :

கூர்மையான விளிம்பினைக் கொண்டு வட்டவடிமாக விளங்கும் இக்கருவிகளை வீசியெறிந்து விலங்குகளைக் கொல்லலாம்.

### 7. துளைப்பான்கள் (Borers) :

நீண்டு மெல்லியதாக காணப்படும் இக்கருவிகளைக் கொண்டு நிலம் மற்றும் மரம் ஆகியவற்றைத் துளைக்கலாம்.

**நுண் கற்காலப் பிரிவு:** ***(நி.ப. 11); (வ.ப. 4)***

வட்டுகள் (Discs), சிறுகத்திகள் (Small Blades), சுரண்டிகள்

(Scrappers), பிறைகள் (Lunates), அம்புமுனைகள் (Arrow heads), அரை வட்ட வடிவிலான தூண்டில்கள்(Fishing hooks) போன்ற நுண்கருவிகள் இதில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ***(நி.ப. 11)*** இவை கிடைத்த ஊர்கள் கீழ் வருமாறு:

1. கொடு மணல், ஈரோடு மாவட்டம்.
2. சாயர்புரம், தூத்துக்குடி மாவட்டம்.
3. பழைய குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்.
4. சுருளிப்பட்டி, தேனி மாவட்டம்.
5. தேரிருவேலி, ராமநாதபுரம் மாவட்டம்.
6. பூதலூர், தஞ்சாவூர் மாவட்டம்.
7. அத்திரம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம்.

**புதிய கற்காலப் பிரிவு: *(நி.ப. 12); (வ.ப. 5,6)***

மதுரை மாவட்டம் சமய நல்லூர், கிருஷ்ணராசபுரம், விழுப்புரம் மாவட்டம், ஜம்பை மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களிலிருந்து சேகரித்து வரப்பட்ட புதிய கற்கால கைக்கோடரிகளும், விழுப்புரம் மாவட்டம் உடையாநத்தம் என்னுமிடத்தில் கிடைத்த புதிய கற் கருவிகளுக்கு மெருகேற்றும் கல்லும் (Polishing stone) இதில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**மாதிரிகள் : *(நி.ப. – 7)***

யானை மற்றும் பறவைகளை வேட்டையாடுவது, வேட்டை யாடிய மானைத் தான் தங்கியிருக்கும் குகைக்கு இழுத்துச் செல்வது, குகையில் விலங்குகளின் உருவங்களை ஓவியங்களாக வரைவது, வேட்டைக்குத் தேவையான கற்கருவிகளைச் செய்வது போன்ற பழைய கற்கால மக்களின் அன்றாட செயல்களை விளக்கும் காட்சி களும், புதிய கற்காலத்தில் வேளாண்மையின் தொடக்கத்தைக் காட்டும் காட்சியும் ஓவியங்களாக வரையப் பெற்று இந்த அகழ் வைப்பதில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

**தொல்லுயிர் எச்சங்கள் (Fossils)**
**(80,00,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை)**

கோடானு கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய பூமி பெரும் மாற்றங்களுக்கு உட்பட்டு இன்றைய நிலையை அடைந்துள்

எது. அது போலவே அதில் வாழ்ந்த உயிரினங்களும் பல மாற்றங்களுக்குட்பட்டு தொல்லுயிர் எச்சங்களாக நமக்கு கிடைக்கின்றன. கீழ்காணும் தொல்லுயிர் எச்சங்கள் பூண்டி அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

1. நத்தை (பெரியது)
2. நத்தை (சிறியது)
3. சிப்பி
4. இலை
5. இலைக் குறியீடுள்ள மென் களிக்கல். - அரியலூர், பெரம்பலூர் மாவட்டம்.
6. மரம் - திருவக்கரை, கடலூர் மாவட்டம்.

## பெருங்கற்காலப் பிரிவு

### 1. மட்கலயங்கள்

மட்கலயங்கள் செய்யும் தொழிலைப் பெருங்கற்கால மக்கள் முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். கருப்பு-சிகப்பு வண்ண மட்கலயங்கள் (Black and Red ware), கருப்பு மட்கலயங்கள் (Blackware), சிவப்பு மட்கலயங்கள் (Redware) , செம்பழுப்பு பூச்சு மட்கலயங்கள் (Russet-coated ware) போன்ற வகை மட்கலயங்களை இம்மக்கள் பெருமளவில் பயன்படுத்தினர்.

**பூண்டி அகழ் வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள மட்கலயங்களின் விவரம் கீழ்வருமாறு :**

| | மட்கலயத்தின் வகையும் பெயரும் | கிடைத்த இடமும் மாவட்டமும் | பயன்பாடு |
|---|---|---|---|
| 1. | கருப்பு சிகப்பு வண்ணக் குவளைகள் | 1. தேவாரம், தேனி மாவட்டம்<br>2. வடகாடு, திருவாரூர்<br>3. கொத்தபாளையம், கரூர் | தண்ணீர், மோர் போன்ற பானங்கள் குடிப்பதற்கு ***(நி.ப. 13)*** |
| 2. | கருப்பு சிகப்பு வண்ண தட்டுகள் | 1. தேரிருவேலி, ராமநாதபுரம்<br>2. பிஞ்சியூர், தஞ்சாவூர்<br>3. கொத்தபாளையம், கரூர் | உணவு சாப்பிடவும் கலயங்கள் மீது மூடவும். ***(நி.ப. 14)*** |
| 3. | சிகப்பு வண்ண மற்றும் கருப்பு வண்ணத் தாங்கிகள் (Stands) | 1. கொத்தபாளையம், கரூர்<br>2. சிறுவானூர், திருவள்ளூர்<br>3. மாம்பாக்கம், காஞ்சிபுரம் | குறுகிய அடிப்பகுதி உடைய மட்கலயங்கள் கீழே விழாதவாறு தாங்குவதற்கு |
| 4. | சிவப்பு வண்ண மிகப் பெரிய பானைகள் (Storage Pots) | 1. சிறுவானூர், திருவள்ளூர் | தானியங்கள் சேமித்து வைக்க ***(நி.ப. 15)*** |
| 5. | சிவப்பு வண்ணப் பெரிய பானை (Big pot) | 1. எருமைவெட்டி பாளையம், திருவள்ளூர் | தண்ணீர் சேமித்து வைக்க. |
| 6. | சிவப்பு வண்ணச் சிறிய பானைகள் | 1. பிஞ்சியூர், தஞ்சாவூர்<br>2. சிறுவானூர், திருவள்ளூர் | தண்ணீர், மோர், கள், குழம்பு போன்றவை நிரப்பி வைக்க ***(நி.ப. 16)*** |

| | | | |
|---|---|---|---|
| 7. | கருப்பு - சிவப்பு வண்ணச் சிறிய பானைகள் | 1. அவியூர், விழுப்புரம்<br>2. வடகாடு, திருவாரூர்<br>3. ஆர்மாமலை, வேலூர்<br>4. கொத்தபாளையம், கரூர் | மருந்து சேமித்து வைக்க. கள், தண்ணீர் போன்றவற்றை நிரப்பி வைக்க. |
| 8. | நீண்ட கழுத்துடைய சிவப்பு வண்ணப் பானை | 1. முகையூர், விழுப்புரம் | கள் குடிக்க *(நி.ப. 16-2.)* |
| 9. | கருப்பு வண்ணக் கிண்ணங்கள் | 1. எருமைவெட்டி பாளையம், திருவள்ளூர் | எண்ணை போன்றவற்றை ஊற்றி வைக்க. |
| 10 | கருப்பு - சிவப்பு வண்ணக் கிண்ணங்கள் மற்றும் சிவப்பு வண்ணக் கிண்ணங்கள் | 1. கொத்தபாளையம், கரூர்<br>2. திருநெல்வேலி, ராமநாதபுரம் | உணவு வகைகளை நிரப்பி வைக்க.<br>உணவு சமைக்க. |
| 11 | கருப்பு வண்ண மூடிகள் - கைப்பிடியுடன் | 1. கொத்தபாளையம், கரூர்<br>2. மாம்பாக்கம், காஞ்சிபுரம்<br>3. தேரிருவேலி, ராமநாதபுரம் | சிறு கலயங்கள் அல்லது கிண்ணங்கள் மீது முடுவதற்கு.<br>தேரிருவேலியில் கிடைத்த மூடியின் கைப்பிடி புறா உருவம் கொண்டுள்ளது. |

**ஈமப் பேழை** (பெரியது): ***(நி.ப. 18,19)***

காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம் திருமங்கலம் கண்டிகை என்னும் ஊரிலிருந்து சேகரித்து வரப்பட்ட இப்பேழை 158 செ.மீ. நீளமும் 66 செ.மீ. அகலமும் 72 செ.மீ. உயரமும் 28 கால்களும் கொண்டுள்ளது. இறந்துபட்ட வயதில் மூத்தவரை ஈமப் பொருட் களுடன் இதில் வைத்துப் புதைத்தனர். சிறியவர்களை வைத்துப் புதைக்கும் சிறிய ஈமப்பேழை ஒன்றும் இங்கு கிடைத்துள்ளது. இறந்தவரை எரித்து அவரின் சாம்பலை சேகரித்து அதனை மூன்று கால்களுடைய சிறிய ஈமத்தாழியில் ***(நி.ப. 17)*** இட்டு புதைத்தனர். அத்தகைய தாழி ஒன்றும் ஈமப்பேழைகளும் இங்கு காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது.

## இரும்புப் பொருட்கள்:

பெருங்கற் சின்னங்களில்மட்கலயங்களுக்கு அடுத்தபடியாகப் பல இரும்புப் பொருட்கள் கிடைக்கின்றன. இதிலிருந்து இம்மக்கள் இரும்புத் தாதுக்களைச் சேகரித்து அவைகளை உருக்கி வார்த்து அதன் மூலம் தம் வாழ்க்கைக்குத் தேவையான வேளாண் கருவிகளையும், போர்க் கருவிகளையும் செய்தனர் என அறிய முடிகிறது.

பூண்டி அகழ்வைப்பகத்தில் தேனி மாவட்டம் எல்லப்பட்டி என்னும் ஊரிலிருந்து சேகரித்து வரப்பட்ட இரும்புத்தாதுகளும் (Iron ores) இரும்பு உருக்குவதற்கான சுடுமண் உலைத் துருத்திக் குழாய் களும் (Terracotta bellows pipes) இரும்புத் தாதுக்களை உருக்கும்போது வெளிப்படும் இரும்பு கசடுகளும் (Iron slags) ஈரோடு மாவட்டம் கொடு மணலில் கிடைத்த இரும்பு மண்வெட்டியும், காஞ்சிபுரம் மாவட்டம் திருமங்கலம் கண்டிகையில் கிடைத்த இரும்புக் கோடாரியும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

## தொல்பழங்கால ஓவியங்கள்

தமிழகத்தில் சுமார் 65 இடங்களில் மலைக்குகைகளிலும், பாறைகளிலும் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியங்களின் புகைப்படங்கள் மற்றும் வரைபடங்கள் சில இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**தாய்த் தெய்வம் (Mother Goddess)**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், உடையாநத்தம் என்னும் ஊரில் பெருங்கற் காலத்தைச் சேர்ந்த கல்லாலான தாய்த் தெய்வ உருவம் ஒன்றிருந்

தனைக் கண்டறிந்தது. இதனை இவ்வூர் மக்கள் 'விசிறிக்கல்' என அழைக்கின்றனர். இதே போன்ற உருவம் ஒன்று திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் மோட்டூர் என்னும் இடத்திலும் உள்ளது. இதனை போன்ற உருவங்கள் மத்திய தரைக்கடல் பகுதியிலுள்ள மினோவன் - கிரீட்டிலும், இத்தாலியில் உள்ள சர்தீனியாவிலும் கிடைத்துள்ளன. இவை கி.மு. 1700 ஆம் ஆண்டைச் சேர்ந்தவை.

இந்தியாவில் இதைப் போன்ற கல் உருவங்கள் கோதாவரி ஆற்றுப் பகுதியிலும், சிறிய செப்பு உருவங்கள் (Copper heads) கங்கையாற்றுப் பகுதியிலும் கிடைத்துள்ளன. இவ்வுருவங்களை ஆய்வாளர்கள் வேத கால 'அதிதி' என்னும் தாய் தெய்வத்துடன் ஒப்பிடுகின்றனர். லட்சுமியின் 'ஸ்ரீவத்சம்' உருவத்தோடு இது பெரிதும் ஒத்துள்ளது. இவ்வுருவம்தான் தமிழகத்திலேயே இதுவரை கிடைத்துள்ள தெய்வ உருவங்களில் மிகவும் தொன்மையானதாகும். இது கி.மு. 1000-யைச் சேர்ந்ததாகும். உடையாநத்தம் தாய் தெய்வத்தின் மாதிரி உருவம் ஒன்று இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**தொல்மாந்தர் வாழ்வகம் : *(நி.ப. 3, 4)***

சுமார் 2,50,000 ஆண்டுகளுக்கு முன்னர் பூண்டியைச் சுற்றியுள்ள பகுதியில் வாழ்ந்த பழைய கற்கால மனிதன் தன் அன்றாட வாழ்க்கையில் மேற்கொள்ளும் செயல்கள் குறித்த நான்கு காட்சிகள் இங்கு ஆளுயர சிலைகளாக வடிக்கப்பட்டுள்ளன.

இம்மக்களின் உருவ அமைப்பு எப்படி இருந்திருக்கும் என்பதை ஆப்பிரிக்க நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எலும்புக் கூடுகளின் உதவியுடன் ஆய்வாளர்கள் ஊகித்திருக்கிறார்கள். அதனடிப்படையில்தான் இங்கிருக்கும் உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இச் சிலைகளுக்கு பின்புறத்தில் பெரிய பாறையை அமைத்து அதில் தொல்பழங்கால ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன. இம்மக்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தனர்.

உணவைச் சேகரிக்க கரடுமுரடான கற்கருவிகளை உபயோகித்தனர். இவர்கள் வலிமையான உடலமைப்பு கொண்டிருந்தனர். வேட்டையாடிய விலங்குகள் மற்றும் பறவைகளின் இறைச்சியையும் இயற்கையாக கிடைத்த காய்கனிகள், கிழங்குகள் ஆகியவற்றையும் உணவாகக் கொண்டனர். இலைகளையும், மரப்பட்டைகளையும், விலங்கின் தோலையும் ஆடைகளாக அணிந்தனர். விலங்குகளின் முதுகெலும்புகளை நரம்பு அல்லது கொடியில் அழகுற கோர்த்து

கழுத்து, மேற்கைகள், கால்கள் ஆகியவற்றில் அணிந்தனர். இவர்கள் இயற்கையான மலைக்குகைகளில் வசித்தனர். இது போன்ற 16 குகைகள் பூண்டிக்கு அருகில் குடியம் என்னுமிடத்தில் உள்ளன.

**சிலைகளின் விளக்கம்**

1. நின்ற நிலையில் உள்ள ஒரு வலிமையான ஆண்மகன் தன் வலது கையில் நீளமான கம்பின் நுனியில் கற்கருவி ஒன்றினை சேர்த்து கட்டிய ஈட்டி போன்ற ஆயுதத்தையும், இடது கையில் விலங்கின் மூட்டு எலும்பிலான கூர்மையான ஆயுதத்தையும் ஏந்திக் கொண்டு வேட்டைக்கு கிளம்புகிறான்.

2. அமர்ந்த நிலையில் ஒரு பெண் தன் இடது கையில்தான் சாப்பிட்ட இறைச்சியின் மீதி பகுதியை வைத்துக் கொண்டு, வலது கையில் சிறிய கம்புடன் சேர்த்து கட்டப்பட்ட கல்லாயுதத்தால் எலும்பு களை உடைக்கிறாள். அவளுடைய ஆண் குழந்தை ஒன்று அவளின் வலது பக்கத்தில் நின்றவாறு ஒரு சிறிய இறைச்சி துண்டினை சாப்பிடுகிறது.

3. அமர்ந்த நிலையில் ஒரு ஆண் குனிந்தவாறு ஒரு பறவையை தீயில் வாட்டுகிறான்.

4. அமர்ந்த நிலையில் ஒரு ஆண் கூழாங்கற்களிலிருந்து சில்லுகளைப் பெயர்த்தெடுத்து விலங்குகளை வேட்டையாடுவதற்கு தேவையான கற்கருவிகளை செய்கிறான்.

# துணை நூற்பட்டியல்


Gardner, R., H. Martingell. 1990, Microlithic sites and their Palaeo environment a setting, South India; A Re-evaluation Geoarchaeology Vol.5, No.1, pp.1-13.

Indian Archaeology: A Review. 1955 - 56, 1956 - 57, 1957 - 58, 1962 - 63, 1963 - 64, 1964 -65, 1965-66, 1966 - 67, 1967 - 68, 1968 - 69, 1970 - 71, 1976 - 77, 1977 - 78, 1978 - 79, 1979 - 80, 1982 - 83, 1984 - 85, 1985 - 86, 1987 - 88 and 1988 - 89.

Jayaswal, Vidula., 1978, Paleohistory of India.

Krishnaswami, V.D., 1938, Pre historic man around Madras, Indian Academy of Sciences Vol.-3, pp. 32 - 35.

Krishnaswami, V.D., 1947, Stone age in India, Ancient India - 3, pp 11 - 57.

Narasimaiah, B., 1980, Neolithic and Megalithic Cultures in Tamilnadu.

Rajan, K., 2000, Archaeology of Palar Basin.

Ramachandran, K.S., 1971, A Bibliography on Indian Megalilhs.

Ramachandran, K.S., 1980, Archaeology of South India.

Ramaswamy, S.N., V. Venkatasubramaniam, S. Riaz Abdullah and S. Balaji, 1992, The Phenomenon of River Migration in North Tamilnadu Evidence from Satellite Data. Archaeology and Tamil Literature - Man and Environment Vol. XVIII (1) pp. 13 - 26.

Sankalia, H.D., 1974, Pre and Proto history of India and Pakistan.

Sankalia, H.D., 1964, Stone age tools - Their techniques Names and probable functions.

Shanti Pappu, 2001, A Re-Examination of the Palaeolithic Archaeological Record of Northern Tamilnadu, South India.

Shanti Pappu, 2002, The Palaeolithic Site of Attirampakkam, Tiruvallur Dist. Tamilnadu, Avanam 13, pp.127.

Shanti Pappu and Kumar Akhilesh, 2002, The palaeolithic Archaeology of the Kortallayar river basin, Tamilnadu, Kalvettu No.58, pp. 16-23.

Shetty, Ashok Vardhan K., 2003 Excavations at Mangudi.

Sridhar, T.S., 2005 Rock art of Tamilnadu, Dept. of Archaeology.

Sridhar, T.S., 2004 Excavation of Archaeological Sites in Tamil Nadu (1969 - 1995)

Swamy, A., 1976, Archaeology of the Chingleput District, Unpublished Ph.D., Thesis., Madras University.

அப்துல் மஜீத், அ., 1974, வடமதுரை, கல்வெட்டு இதழ் : 2

அப்துல் மஜீத், அ., 1975, பெருங்கற்சின்னங்கள், கொங்கு, பக். 210-212.

இராசவேலு, சு., கோ. திருமூர்த்தி, 1995, ‘தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள்’

காசிநாதன், நடன., 1994, தமிழர் நாகரிகம், தொல்லியல் துறை.

காந்தி, ம., 1999, தமிழ்நாட்டில் பாறை ஓவியங்கள்.

குமார், கி., 2002, காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொல்லியல் கண்டுபிடிப்புகள். ஆவணம்-13, பக்.134-142.

குருமூர்த்தி, சா., 1974, தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்.

சண்முகம், ப., ஜே.எஸ். சிங்காரவேலன், 1999, நன்மங்கலத்தில் தொல்பழங்காலக் கருவிகள், ஆவணம்-10, பக்.103-104.

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவினர் - 1975, தமிழ்நாட்டு வரலாறு - தொல் பழங்காலம்.

துளசிராமன், து., 1978, செங்கற்பட்டு மாவட்டத்தில் பழைய கற்காலப்பண்பாடு, செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, பக்.165 - 171.

துளசிராமன், து., 1978, செங்கற்பட்டு மாவட்டத்தில் பெருங் கற்காலப்பண்பாடு, செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, பக்.172 - 181.

துளசிராமன், து., 1983, கொத்தபாளையம் மட்கலன்களும் குறியீடுகளும், தொல்லியல் கருத்தரங்கு, தொகுதி-2.

துளசிராமன், து., 1995, தொல்பழங்காலத்தில் சமய நிலை, கல்வெட்டு இதழ்:41, பக். 4 – 9.

துளசிராமன், து., 1997, பரிக்குளம்: பழைய கற்கருவிகளின் தொழிற்கூடம், ஆவணம்: 8, பக். 147 - 149.

நாகசாமி, இரா., 1968, ஈமச்சின்னங்கள்; இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு கண்காட்சிக் கையேடு, பக். 108 - 111.

பவுன்துரை, இராசு., 2001, தமிழகப் பாறை ஓவியங்கள்.

முரளிதரன், கே., 1985, தொல் பழங்கால ஓவியக்கலை, தொல்லியல் ஆய்வுத் தொகுதி, பக்.71 - 173.

ராஜன், கா., 1994, கொடுமணல் அகழாய்வு.

ராஜன், கா., 2003, 'மயிலாடும்பாறை அகழ்வாய்வு ஆவணம்': 14, பக்.120 - 126.

ராஜன், கா., 2004, 'தாண்டிகுடி அகழாய்வு' ஆவணம்: 15, பக். 146 - 148.

வசந்தி, சீ., 1999, தமிழக அகழாய்வில் சாதனைகள்.

***

# சொல்லடைவு


**(எண் – பக்க எண்)**


அகேட், 25
அசூலியன், 14, 15,17,52
அத்திரம்பாக்கம், 10, 15, 16,18, 19,21,51,54.
அதிதி, 59
அபவில்லியன், 14,17,18,52.
அம்பு முனைகள், 25
அம்மிக்கற்கள், 26
அவியூர், 57
அல்லிக்குழி, 13,14
அழகன்குளம், 40
அரக்கோணம், 12
அரிவாள்கள், 25
ஆதிச்சநல்லூர், 31
ஆந்திர மாநிலம், 28
ஆப்பிரிக்க நாடு, 59
ஆமை வடிவகோடரி, 53
ஆலம்பாடி, 42
ஆர்மாமலை, 57
ஆரணியாறு, 51
ஆரணியாற்றுச் சமவெளி, 18
ஆற்றுப்படுகை, 10, 13
இடுதுளை, 31
இடைக்கற்காலம், 10,16,18.
இடைக்காலக் கருவிகள், 14
இதய வடிவிலான கைக்கோடரி, 17
இராபர்ட் புரூஸ்புட், 10,15
இருபக்க கற்கோடரி, 27
இரும்புக்காலம், 29
இலங்கைக் கடற்கரை, 25
இனக்குழுக்கள், 46
ஈமச்சடங்கு, 32
ஈமப்பொருட்கள், 29,30
ஈமப்பேழை, 30
ஈமச் சின்னங்கள், 31
ஈமத்தாழி, 30
ஈரோடு, 42
உடைமைக்குறி, 40
உடையாநத்தம், 32,58.
உலோக தாய் தெய்வ உருவம், 31
எருமைவெட்டி பாளையம், 13,56,57
ஒதிகுப்பம், 46
ஒப்பந்தவாடி, 46
கடல்நீர் படிவு படுகைகள், 11
கடைக்கற்காலம், 10,16,19
கடைக்கற்காலப் பண்பாடு, 16.
கல்பதுக்கை, 29
கல்லறை, 29
கற்கிடை, 30
கல்வட்டம், 30
கல்தாய் தெய்வ உருவம், 32
கலிங்கத்துப் பரணி, 13
கரடுமுரடான கற்கருவிகள், 26
கரித்துண்டுகள், 43
கருணாகரத் தொண்டைமான், 13
கருவோட்டுப் பள்ளம், 27
கற்காலம், 9
கன்னியாகுமரி, 25
காஞ்சிபுரம், 10
காட்டாறுகள், 25


காரனோடை, 13
கால்களுடைய ஈமத்தாழி, 30
கிருஷ்ணகிரி, 26,28,42
கிருஷ்ணசாமி, வி.டி. 10,13.
கிரிஸ்டல், 25
கிழிப்பான்கள், 14,15,53
கீழ்வாலை, 42,45
குகைத் தெய்வங்கள், 46
குச்சி நடுக்குழிகள், 27
குடியம், 10,14
குடியாலா, 14
குதிரை, 16
குயவர் குறி, 40
குலக்குறி, 41
குருவிநாயனப்பள்ளி, 45
குழவிகள், 26
குழிவீடுகள், 26,27
குறியீடுகள், 40,45
கூர்முனைக்கருவிகள், 14,17
கூழாங்கல் படிவடுக்கு, 15
கெட்டியான களிமண், 17
கைக்கோடரிகள், 12,14,15,17,18
கைக்கோடரிப் பண்பாடு, 12
கொண்டாபுரம், 13
கொடுமணல், 40,54,58
கொம்புகளற்ற மான், 16
கொத்தபாளையம், 41,56
கொற்றலையாறு, 15,18,19,51,52.
கொற்றலை யாற்றுப் பள்ளத்தாக்கு, 10
கோதாவரி ஆறு, 59
கோயம்புத்தூர், 42
ஞாயிறு வழிபாடு, 31
சங்காலியா, எச்.டி., 14
சதுரங்கப்பட்டினம், 13
சர்தீனியா,59
சர்மா மரபியல் கல்வி மையம், 15
சாந்திபப்பு, 11,14
சாமி, எ., 11
சாம்பல்நிற மட்கலன், 27
சாயர்புரம், 54
சாரணப்பன்கோவில், உச்சி, 27
சால்சிடோனி, 25
சித்திரக் குறியீடுகள், 46
சிதைந்த சரளைக்கல் அடுக்கு, 17
சிந்துசமவெளிக் குறியீடுகள், 46
சிவவழிபாடு, 31
சில்லுகள், 18
சில்லுக்கருவிகள், 14
சிறிய வெட்டுக்கருவிகள், 17
சிறு கருவிகள், 26
சிறு கத்திகள், 19,25
சிறுவானூர், 56
சுண்ணக்கட்டிகள், 43
சுரண்டிகள், 15,17,18,19,25,53.
சுருளிப்பட்டி, 54
சூலம், 31
செங்கம், 32
செங்கல்பட்டு, 13
செங்காவிக்கட்டிகள், 43
செஞ்சி, 31
செத்தவரை, 42
செந்நிறச் சரளைக்கல், 17
செந்நிறப் படிவடுக்குகள், 19
செப்பு உருவங்கள், 59
செம்மண் சரளைக்கல்மேடு, 16
செம்மண் தேரிகள், 25
செர்ட், 25
சென்னை, 10
சென்னை மரபு, 12
சேலம், 26

சோன்மரபு, 12
சௌந்திரராஜன் கே.வி., 10
தட்டைக் கற்கள், 26
தர்மபுரி, 26,28,42
தாய் தெய்வம், 58
தாய் தெய்வ சுருமண் உருவம், 28
தாய் தெய்வவழிபாடு, 28,31
தாளப்பள்ளி, 45
திண்டுக்கல், 42
திருத்தணி, 12
திருநெல்வேலி, 25
திரிகை கற்கள், 26
திருவண்ணாமலை, 32
திருவள்ளூர், 12,18
திருமங்கலம் கண்டிகை, 58
திருமால்பாடி, 45
தூண்டில்கள், 25
தூத்துக்குடி, 25
துளைப்பான்கள், 53
தேரிருவேலி, 54,56,57
தேவாரம், 56
தேனி, 25,42
தைலமலை, 26
தொக்கரப்பள்ளி, 26
தொல்பழங்காலம், 9
தொல்பழங்கால ஓவியங்கள், 42
தொல்பழங்கால ஓவியங்கள்
காணப்படும் இடங்கள், 48
தொல்மாந்தர் வாழ்வகம், 51
தொல்லுயிர் எச்சங்கள், 54
தொல்லுயிரியல் படிவம், 15,16
தொழிற்கூடம், 18
நிலஆக்க இயல், 14
நிலப்பரப்பின் இயற்கூறுகள், 11
நிலப்பொதியியல், 17
நீண்டகத்திகள், 14,25
நீலகிரி, 42
நீர்பெருமை, 16
நுண்கற்காலம், 9,25
நெய்வேலி, 11,14
படிகக்கல், 25
படிகக்கல் மனிதர்கள், 12
படிவடுக்குகள், 13,14,17
படிவு படுகை 11,14,16
பல்லாவரம், 10
பரிக்குளம், 16
பழவேற்காடு, 13
பழைய கற்காலம், 9
பழைய கற்றாலக் கருவிகள்
கிடைக்கும் இடங்கள் பட்டியல், 21
பழைய குற்றாலம், 54
பாடியந்தல், 42
பாலாறு, 13
பார்சி இனத்தவர், 32
பாறை ஓவியங்கள், 40
பாறை கீறல்கள், 27,40
பானர்ஜி, கே.டி., 11,15
பிக்லி ஹால், 28
பிஞ்சியூர், 56
பிராமி எழுத்துகள், 40
பிளைஸ்டோசீன், 11,13,14,16,17
பிறைகள், 25
புதிய கற்காலம், 9,26,27,42
புதிய கற்காலப் புரட்சி, 26
புதுக்கோட்டை, 42
புறாக்கல், 42,45
பூண்டி, 11,14
பூதடி மன்னுவங்க, 15
பூதலூர், 54
பெருங்கற்காலம், 9, 29
பெருங்கற் சின்னங்கள், 29
பெருங்கற்கால அகழாய்வு நடை

பெற்ற இடங்கள் பட்டியல், 33
பெருமழைக்காலம், 11
பொதிகைமலை, 45
பொன்னேரி, 12
பேட்டர்சன், டி.டி., 10,13
பையம்பள்ளி, 26,27
மகாராஜக்கடை, 47
மட்கலத் தொழில், 31
மதுரை, 25,42
மயிலாடும் பாறை, 26,27
மல்ல சமுத்திரம், 45,47
மல்லசந்திரம், 46
மல்லப்பாடி, 26,27,42
மரம் இழைக்கும் உளி, 18
மாட்டின் காலடி, 15
மாம்பாக்கம், 56
மினோவன் கிரீட், 59
முக்கோண வடிவ கோடரி, 17
முகையூர், 57
முட்டம், 25
முடிப்பி நாயனப்பள்ளி, 46
முதற்கற்காலம், 10,16,18
முருக வழிபாடு, 31
முள்ளிக்காடு, 26
முனைகள், 18
மூலக்கற்கள், 19
மெருகேற்றிய கற்கருவிகள், 26
மென்களிக்கல், 55
மோட்டூர், 32,59
வடகாடு, 56
வடமதுரை, 11,14,52
வட்டுகள், 18,25,53
வரலாற்றுக்காலம், 9
வரலாற்றுக்கு முந்திய காலம், 9
வளமை வழிபாடு, 28
வாலாசாபேட்டை, 12
விழுப்புரம், 31, 42
விதுலா ஜெய்ஸ்வால், 11
விருத்த ஷீரநதி, 12
விருதுநகர், 25
விலங்கினத் தலைமனிதர், 45
வில்லியம் கிங், 10
வெட்டிகள், 15
வெட்டுக்கத்திகள், 17
வெட்டுக்கருவிகள், 14
வெப்ப மண்டலச்சமவெளி, 16
வேலூர், 12,18,26,28,42
ஜாஸ்பர், 25
ஜெயங்கொண்டார், 13
ஹாலோசீன், 14
ஸ்ரீவத்சம், 59





வரைபடம் - 1


கைக்கோடரியின் செயற்பாடுகள்
கைக்கோடரி (Handaxe)
தோண்டுதல் (Digging)
வெட்டுதல் (Cutting)
துளையிடுதல் (Boring)

*வரைபடம் - 2*


மரக்கம்புகளால் கட்டப்பட்ட ஈட்டிபோன்ற கற்கருவிகள்



SPEAR - HEAD AXE HAFTED IN A WOODENPOLE

வரைபடம் – 3


## பிளேடு போன்ற ஒரு கற்கருவியைச் செய்யும் முறை



**PREPARATION OF A BURIN**

*வரைபடம் – 4*


கைப்பிடியில் பொருத்தப்பட்ட கற்கருவிகள்



Pointed Butt Axe Hafted in a Slotted Handle

வரைபடம் – 5


மரக்கைப்பிடிகளில் பொருத்தப்பட்ட கற்கருவிகள்



STONE TOOLS HAFTED IN WOODEN POLES

வரைபடம் - 6


கல் பதுக்கை



DOLMENOID CIST

வரைபடம் – 7


கல்லறை



SLABED CIST

வரைபடம் – 8

பல கல்வட்டங்களுக்குள் ஒரு கல்லறை



DOLMENOID CIST WITH SLAB CIRCLES

வரைபடம் – 9

ஆட்டு உருவம் கொண்ட ஈமப்பேழை




ZOO-MORPHIC SARCOPHAGUS


*வரைபடம் – 10*




1. பூண்டி அகழ்வைப்பகம்




2. குடியம் குகை



3. தொல்மாந்தர் வாழ்வகம் – தூரத் தோற்றம்



4. தொல்மாந்தர் வாழ்வகம் – அண்மைத் தோற்றம்



5. பழைய கற்காலக் கருவிகள்



மேற்பரப்பு ஆய்வு - பரிக்குளம்




6. சிறப்பு ஆணையர் தலைமையில், பூண்டி காப்பாட்சியர், அகழாய்வாளர், தொல்லியல் அலுவலர் ஆகியோர் ஆய்வு மேற்கொள்ளுதல் – பரிக்குளம்







7. காட்சியில் இடம்பெற்றுள்ள பாறை ஓவியங்கள் மற்றும் விளக்கப் படங்கள்





8. பழைய கற்காலக் கிழிப்பான்கள் (Cleavers)
1, 2, 4, 6 – அத்திரம்பாக்கம் – 3,5 – பரிக்குளம்



9. பழைய கற்காலக் கோடரிகள் (Hand Axes) அத்திரம்பாக்கம்



10. ஆமை வடிவக் கைக்கோடரி (Micoqurin) அத்திரம்பாக்கம்.




அ

ஆ


இ

11. நுண் கற்கருவிகள்


அ. சாயர்புரம், ஆ. கொடுமணல், இ. அத்திரம்பாக்கம்




12. புதிய கற்கருவிகள் 1. உடையாநத்தம்,
2,3 சமயநல்லூர், 4. கிருஷ்ணபுரம், 5 ஜம்பை




13. பெருங்கற்காலக் கோப்பைகள்
1,3 – தேவாரம் – 2,4 – கொத்தப்பாளையம்





14. பெருங்கற்காலத் தட்டுகள்
1,4,5,6. – கொத்தப்பாளையம், 2. பிஞ்சியூர், 3. தேரிருவேலி.




15. தானியங்கள் சேமித்து வைக்கும் பானைகள்
(பெருங்கற்காலம்) சிறுவானூர்





16. சிறிய பானைகள் (பெருங்கற்காலம்) 1. பிஞ்சியூர், 2. முகையூர், 3. சிறுவானூர்



17. மூன்று கால்களுடைய ஈமத்தாழி (பெருங்கற்காலம்)
– திருமங்கலம் கண்டிகை.



18. பெரிய ஈமப்பேழை (பெருங்கற்காலம்) (நிழற்படம் 18)



19. சிறிய ஈமப்பேழை (பெருங்கற்காலம்) – திருமங்கலம் கண்டிகை. (நிழற்படம் 19)

# துறை வெளியீடுகள் — Departmental Publications

| வ. எண். | நூலின் தலைப்புகள் | விலை |
|---|---|---|
| 1. | தருமபுரி கல்வெட்டுகள் (முதல் தொகுதி) | 9.50 |
| 2. | திருத்துறைப்பூண்டி கல்வெட்டுகள் | 15.00 |
| 3. | கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (நான்காம் தொகுதி) | 7.50 |
| 4. | கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (ஐந்தாம் தொகுதி) | 7.50 |
| 5. | நன்னிலம் கல்வெட்டுகள் (முதல் தொகுதி) | 15.00 |
| 6. | நன்னிலம் கல்வெட்டுகள் (இரண்டாம் தொகுதி) | 15.00 |
| 7. | நன்னிலம் கல்வெட்டுகள் (மூன்றாம் தொகுதி) | 15.00 |
| 8. | தக்கை இராமாயணம் (முதல் தொகுதி) | 36.00 |
| 9. | திருக்கோடிகா கல்வெட்டுகள் | 27.00 |
| 10. | தமிழ்க் கீர்த்தனைகள் | 37.00 |
| 11. | திருக்குறள் பழைய உரை | 43.50 |
| 12. | குருபரம்பரை புராணம் (இரண்டாம் தொகுதி) | 60.00 |
| 13. | திருவீழிமிழலை கல்வெட்டுகள் | 116.00 |
| 14. | விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்ட வரலாறு | 100.00 |
| 15. | திருமலை நாயக்கர் செப்பேடுகள் | 52.00 |
| 16. | நெல்லை மாவட்டக் கையேடு | 27.00 |
| 17. | பெருமுக்கல் கல்வெட்டுகள் | 48.00 |
| 18. | தொல்லியல் நோக்கில் தமிழகம் | 80.00 |
| 19. | தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள் | 30.00 |
| 20. | வரலாறும் கலையும் | 30.00 |
| 21. | கல்வெட்டு காலாண்டிதழ் 59 | 2.00 |
| 22. | கல்வெட்டு காலாண்டிதழ் 60 & 61 | 4.00 |
| 23. | கல்வெட்டு காலாண்டிதழ் 62, 63, 64 (தனிப் பிரதி) | 5.00 |
| 24. | ஆய்வில் பூத்த மலர்கள் | 90.00 |
| 25. | தமிழர் நாகரீகம் | 221.00 |
| 26. | திருமலை நாயக்கர் அரண்மனை துணை மடல் | 5.00 |
| 27. | Padavedu Excavations | 22.00 |
| 28. | Thiruthani Velancheri Copper Plates | 30.00 |
| 29. | Studies in Ancient Township of Pudukottai | 80.00 |
| 30. | Collected Papers by R. Thirumalai | 200.00 |
| 31. | Collected Papers by Natana. Kasinathan | 50.00 |

| வ. எண். | நூலின் தலைப்புகள் | விலை |
|---|---|---|
| 32. | Thirukkoyilur Excavation | 134.00 |
| 33. | Metropolis of Medieval Cholas | 1.50 |
| 34. | Tamilnadu Archaeology Perspectives in English | 44.00 |
| 35. | New light on Tamil Art & Culture | 15.00 |
| 36. | Excavation at Mangudi | 76.00 |
| 37. | Excavation at Perur | 64.00 |
| 38. | திருவலஞ்சுழி கல்வெட்டுக்கள் | 96.00 |
| 39. | திருவாரூர் மாவட்டத் தொல்லியல் வரலாறு | 155.00 |
| 40. | விருதுநகர் மாவட்ட வரலாறு | 128.00 |
| 41. | இராமலிங்கவிலாச அகழ்வைப்பகக் கையேடு | 3.00 |
| 42. | The Pandian Townships Part - I | 521.00 |
| 43. | The Pandian Townships Part - II | 533.00 |
| 44. | Tarangampadi (Tranqubar) Excavation and Conservation Report | 31.00 |
| 45. | Excavations of Archaeological Sites in Tamilnadu (1969-95) | 66.00 |
| 46. | தமிழகக் கோயிற் கலைகள் | 17.00 |
| 47. | Tarangampadi - R. Nagasamy | 17.00 |
| | **புதிய வெளியீடுகள் — New Arrivals** | |
| 1. | பாபநாசம் கல்வெட்டுகள் – தொகுதி I - II | 173.00 |
| 2. | Excavations of Archaeological Sites in Tamil Nadu | 66.00 |
| 3. | தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் – 2004 | 136.00 |
| 4. | ஐம்பை ஓர் ஆய்வு | 30.00 |
| 5. | தமிழ்நாட்டுச் செப்பேடுகள் – தொகுதி I | 52.00 |
| 6. | Alagankulam - An Ancient Roman Port City of Tamil Nadu | 94.00 |
| 7. | கோவை மாவட்டத் தொல்லியல் கையேடு | 41.00 |
| 8. | தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள் | 28.00 |
| 9. | தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் | 54.00 |
| 10. | Rock Art of Tamil Nadu - T.S. Sridhar | 53.00 |
| 11. | Report of Conservation of Monuments | 93.00 |
| 12. | தமிழகத் தொன்மைச் சின்னங்கள் | 53.00 |
| 13. | ஆண்டிப்பட்டி அகழாய்வு | 41.00 |
| 14. | Modur Excavation Report | 40.00 |